# செந்தமிழ்ச் செல்வி

## திங்கள் வெளியீடு

| சிலம்பு ௪௭ | திருவள்ளுவர் ஆண்டு ௨00௪, மார்கழி<br>சனவரி 1973 | பரல் ௫ |
|---|---|---|

# திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி

(முன் பரல் ௪ பக்கம் ௨00 தொடர்ச்சி)

இராசா சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் 30-1-1942 இல் தமியேனுக்கு எழுதியனுப்பிய பாராட்டுரை வருமாறு :

> "சமீபத்தில் நான் திருப்பனந்தாள் போயிருந்த போது ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் கழகப் பதிப்பு வெள்ளிக் கட்டடஞ் செய்த திருக்குறளை ஞாபகார்த்த மாகத் தந்தார்கள். எல்லாருக்கும் எக்காலத்தும் உதவக்கூடிய நீதிநூல் ஒன்றைச் சந்நிதானத்தில் அன்பு பாராட்டித் தந்ததைப் பற்றிப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். புத்தகப் பதிப்பு அழகு பெற அமைந்திருப்பது போற்றத்தக்கது."

**'திருக்குறள் மூலம்' (மூன்றும் பதிப்பு 1933)**

1933ஆம் ஆண்டில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தையும் மூலமாக ஒரே அளவில் பதித்து வெளியிடுவான் கருதி அந்நூல்கட்கு ஒளிவிளக்குப் போன்ற திருக்குறள் $12 \times 8\frac{1}{4}$ செ. மீ. அளவில் அச்சிடப் பெற்றது. அதன்கண் பக்கத்துக்கு ஓரதிகாரமாக அமைக்கப் பெற்றுள்ளது. அதே ஆண்டில் அதே அளவில் தனி நூலாக நாலடியாரையும், மற்றொரு தனி நூலாக நானூற்பது, நான்மணிக்கடிகை ஆகியவற்றையும் அச்சிட்டுத்

திருக்குறள் மூலத்துடன் சேர்த்துப் **பதினெண்கீழ்க் கணக்கு முதற் பகுதி** 152ஆவது கழக வெளியீடாக வெளியிடப் பெற்றது.

**திருக்குறள்** (திருவள்ளுவர் 2000 ஆண்டு நினைவு)

1969ஆம் ஆண்டு திருவள்ளுவர் 2000 ஆண்டு விழாவின் நினைவுக்குறியாக வெளியிடுவான் கருதித் திருக்குறள்மூலம் முதற் பதிப்பின் அளவிலேயே வெளியிடப்பெற்றது. அதற்கு மட்டும் கழக வெளியீட்டு வரிசையில் வெளியீட்டெண் 1356 கொடுக்கப் பெற்றது. மேலட்டையுறையின் முகப்பிலும் பின் பக்கத்திலும் இரு வண்ணங்களில் உலகப்படம் அமைக்கப்பெற்றுக் கவின்மிகு தோற்றம் அளிக்கின்றது. மிகவுங் குறைந்த 60 காசு விலை வைத்துப் பதினுயிரம் படிகட்கு மேல் அச்சிட்டுப் பரப்பலாயிற்று.

**மாணவர் திருக்குறள், மாணவர் செய்யுட்கோவை** (9 × 6 செ. மீ.)

இள வயதிலேயே மாணவர்கள் கல்வியறி வொழுக்கங்களைப் பெற்று நல்வாழ்வு பெறும் பொருட்டு 70 திருக்குறட் பாக்களை மட்டும் தேர்ந்தெடுத்து 'மாணவர் குறள்' என்ற நூல் 1935ஆம் ஆண்டில் அச்சிடலாயிற்று. அதற்குக் காலணு (1½ காசு) விலை வைக்கப்பெற்றது. பல்லாயிரக்கணக்கான படிகள் விற்றன. பள்ளி விழாக்கள், திருமண விழாக்கள் ஆகியவற்றிற்கு ஆயிரக் கணக்கில் வாங்கப்பெற்றன.

மாணவர் திருக்குறளைப்போலத் தேவாரம், திருவாசகம், திருவருட்பா போன்ற அருட்புகழ் நூல்களிலிருந்தும் நாலடியார், சங்கச் செய்யுள் போன்ற அற நூல்களிலிருந்தும் மாணவர்கள் நெட்டுருச் செய்தற்கேற்ற எளிய இனிய பாடல்களைத் தேர்ந்தெடுத் தமைத்துக் காலணு வெளியீடாக வெளியிடின் மக்கட்கு அவை பெரும்பயன் தரும் என்ற கருத்துத் தோன்றவே 1948இல் மாணவர் தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ், திருவருட்பா, பட்டினத்தார், தாயுமானவர், பிள்ளைத்தமிழ், நாலாயிரத் திருப்பனுவல், நாலடியார், சங்கச் செய்யுள் ஆகிய பதினொரு நூல்களையும் தனித்தனியாக, வெளியிட்டோம். அவற்றுடன் மாணவர் திருக்குறளைச் சேர்த்து **'மாணவர் செய்யுட் கோவை'** என்ற பயனுள்ள நூல் கண்கவர் வனப்பில் அச்சிடப்பெற்று வெளிவந்துள்ளது. இதுவும் பல பதிப்புகளாகப் பல ஆயிரம் படிகள் அச்சிடப் பெற்றுப் பயன் விளைத்து வருகின்றது.

## திருக்குறள் பதின்வகை நினைப்பு (தசாவதானம்)

1934ஆம் ஆண்டில் திருக்குறள் அவதானம் திரு சுப்பிர மணிய தாசு 10 அகவையுள்ள தம் அருமைத் திருமகன் இராம தாசை அழைத்துக்கொண்டு என்னிடம் வந்தனர். தம் திருமகனும் தம்மைப்போல் திருக்குறள் அவதானம் செய்யுந் திறனைப் பெற்றிருக்கிருன் என்று சில வினுக்களை வினவுமாறு கூறினர். யான் வினவிய வினுக்களுக்கெல்லாம் செல்வன் இராமதாசு பிழையில்லாமல் உடனுக்குடன் விடைசொல்லித் திகைப்படையச் செய்தனன். ஒரு குறளைச் சொல்லி எந்த அதிகாரத்தில் எத்தனையாவது குறள் என்ருல் சொல்லுவன். ஓர் அதிகாரத்தின் பேரைச் சொல்லி அதிலுள்ள குறட்பாக் களைத் தலைகீழாகச் சொல்லுகவெனின் சொல்லுவன். ஒரு குறட் பாவின் கருத்தைச் சொல்லிக் குறளைக் கேட்பின் சொல்லுவன். ஒரு குறளின் இரண்டாவது அடியைச் சொல்லிக் குறளைக் கேட் பினும் சொல்லுவன். ஒரு குறளைச் சொல்லி அது எந்தப் பாலில் எந்த இயலில் உள்ளது என்று கேட்பினும் சொல்லுவன். திருக்குறள் நூல் உலகிலேயே யாண்டுங் கிடைக்கப் பெருமல் மறைந்தொழிந்து போகுமாஞலும் செல்வன் இராமதாசு வழி அதனைப் படைத்துக் கொள்ளலாம் எனத் தெரிந்து யான் அடைந்த மகிழ்ச்சிக்களவில்லை. திருக்குறட் செல்வன் இராம தாசைப் பல பள்ளிகட்கும் பல மன்றங்கட்கும், திருக்கோயில் கட்கும் அழைத்துச் சென்று ‘திருக்குறள் அவதானம்’ நடத் தியதில் அவனுக்குப் பல பரிசுகளும் பாராட்டுக்களும் கிடைத்தன.

“நுண்மாண் நுழைபுலமிக்க இச்சிறுவனை இந்த அவதா னத்தோடே விட்டுவிடுதல் கூடாது. பள்ளிக் கல்வி முடிந் ததும் திருவையாற்றுப் புலவர் கல்லூரியிற் சேர்த்துத் தமிழில் வித்துவான் பட்டம் பெறுதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். கல்லூரியில் இடம் பெற்றுத்தர முயல்வேன்” என்று தந்தையா ரிடம் கூறினேன். அவ்வாறே அவர் திருவையாற்று அரசர் கல்லூரியிற் பயின்று வித்துவான் பட்டம் பெற்றுத் திருநெல் வேலி மந்திரமூர்த்தி உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகின்றனர்.

திரு சுப்பிரமணிய தாசு அவர்கள் என்னேடு ஒரு திங்கள் வரை தங்கியிருந்தமையால் அவர்கள்வழித் திருக்குறளிலுள்ள அரிய பல நுண் கருத்துக்களையெல்லாம் அறிந்து இன்புற வாய்ப்புக் கிடைத்தது.

**திருக்குறள் முச்சீர்மணிகள், நாற்சீர்மணிகள் :**

'அற்ருல் அளவறிந்து உண்க', 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்', 'மறந்தும் பிறன்கேடு சூழற்க', 'கற்றில ஞயினும் கேட்க' போன்ற கருத்து நிறைவுள்ள முச்சீர் மணிகளையும் 'அருளாட்சி ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு', 'அருள் கெடுத்து அல்லல் உழப்பிக்குஞ் சூது', 'எஞ்ஞான்றும் நஞ்சுண் பார் கள்ளுண் பவர்', 'வெஃகாமை வேண்டும் பிறன்கைப் பொருள்' போன்ற முடிந்த கருத்துள்ள நாற்சீர் மணிகளையும் தொகுத்து வெளியிடுதல் வேண்டும் என்னும் கருத்துத் தோன் றிற்று. உடனே அவற்றையெல்லாம் தொகுத்ததில் 227 முச்சீர் மணிகளும், 174 நாற்சீர் மணிகளும் கிடைக்கப்பெற்றன. யான் தொகுத்தவற்றைத் திருக்குறட் செல்வர் சுப்பிரமணிய தாசு அவர்கள் சரிபார்த்துத் தந்தனர்.

இவ்விரண்டும் அகரவரிசையில் தனித்தனி நூலாகப் பொழிப்புரையோடு 1942இல் முறையே 342, 345 வெளியீட் டெண் பெற்று $10 \times 6\frac{3}{4}$ செ. மீ. கையடக்க அளவில் கழக வழி வெளியிடப் பெற்றுப் பலர் பாராட்டுக்களைப் பெற்றன.

திருக்குறள் முச்சீர் மணிகட்கு என் பெருமதிப்புக்குரிய தமிழ்ப் பெரும்புலவர் துடிசைக்கிழார் சிதம்பர முதலியாரும், நாற்சீர் மணிகட்கு என் கெழுதகை நண்பர் வித்துவான் மு. இராசாக்கண்ணனாரும் என் விருப்பத்திற்கிணங்கிப் பொழிப் புரை எழுதி யுதவினர். இந்நூல்களும் சில பதிப்புக்களைப் பெற்றுத் திருக்குறட் கல்வியை மாணவர்களிடையே பரப்பி யுள்ளன எனின் அது மிகையாகாது.

**திருக்குறள் நீதி அட்டைகள் :**

திரு தாசு அவர்கள் கழகத்தில் தங்கியிருந்தபோதே திருக் குறள் நீதிகளில் சிலவற்றைத் தனித்தனித் தாளில் அச்சிட்டுப் பரப்புவதும் திருக்குறட் கல்விக்குச் செய்ய வேண்டிய அருந் தொண்டாகும் எனக் கருதினேம். தொகுக்கப் பெற்ற முச்சீர் மணிகள், நாற்சீர் மணிகளிலிருந்து பள்ளிகட்குப் பயன்தரக் கூடிய 'அற்ருல் அளவறிந் துண்க', 'அறிவுடையார் எல்லாம் உடையார்', 'எனைத்தானும் நல்லவை கேட்க' போன்ற 30 மணிகள் பொறுக்கி எடுக்கப் பெற்றன.

அவை தனித்தனி $43 \times 17$ செ. மீ. அளவில் வெண்மை யான தாளில் நாற்புறமும் சிவப்பு, பச்சை நிறங்களில் பூவரும்பு கட்டிப் பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பெற்றன.

இவை படங்களைப் போலச் சுவரில் தொங்க விடுதற் பொருட்டு ஒவ்வொரு குறள்மணித் தாளும் கலிக்காத் துணியினால் விளிம்புபோர்த்த கனத்த அட்டையில் அழகுற ஒட்டப் பெற்றும் அட்டைத் தலைப்பில் கண்துளை (Eyelet) யடித்து வண்ண முறுக்குநூல் கட்டப்பெற்றுமுள்ளது. இவை தாளாகவும் அட்டைகளாகவும் விற்கப்பெறுகின்றன.

இவை பள்ளிகள், இல்லங்கள், விழாப் பந்தர்கள் முதலியவற்றை அணி செய்து திருக்குறள் அறநெறிகளைப் பரப்பி வருகின்றன,

1969இல் 1330 திருக்குறளில் 32 முழுக் குறளைத் தேர்ந்தெடுத்து $45\frac{1}{2} \times 15\frac{1}{2}$ செ. மீ. அளவில் பட அச்சுமுறை (Offset) யில் இரு வண்ணங்களில் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம். இவை திருக்கோயில்கள், பள்ளிகள், கல்லூரிகள் பலவகை விழாப் பந்தர்கள் முதலியவற்றிற்கு வாங்கப் பெறுகின்றன.

இவ்வாறு பல்லாற்றானுந் திருக்குறளைப் பரப்புதற்குக் கழகஞ் செய்துவருந் தொண்டு சான்றோர்களாற் பெரிதும் பாராட்டப்பெறுகின்றது.

**திருக்குறள் நாட்குறிப்பு :**

சில ஆங்கில நாள்காட்டிகளிலும், நாட்குறிப்பு ஏடுகளிலும் ஓரொரு நாளுக்குமுரியதாக ஆங்கில நூல்களிலிருந்து ஓர் அறவுரையினையோ அறிவுரையினையோ வெளியிடுவது வழக்கமாகவுள்ளது. அதே முறையில் 366 சிந்தனையுரைகள் ஒரு நாளைக்கொன்றென்னுமாறு நூலாகவும் வெளியிடப்பட்டுள்ளன. ஆங்கிலப் பேரறிஞரும் சிறந்த சிந்தனையாளருமான **சேம்சு ஆலன்** ஓராண்டு 366 நாள்களுக்கு 366 சிந்தனையுரைகளைத் தாமே இயற்றி 'Daily Meditations,' என்ற தலைப்பில் சிறந்ததொரு நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். அதனையே தமிழாக்கஞ் செய்து 'நாள் வழி நற்சிந்தனைகள்' என்று கழகம் வெளியிட்டுள்ளது,

தமிழ் நூல்களிலிருந்து நாள் ஒன்றுக்கு ஓர் அறவுரையோ அறிவுரையோ தேர்ந்தமைத்த நாள்காட்டியோ நாட்குறிப்பேடோ வரவில்லையே என்று பூனாவிலிருந்த **திருவாட்டி தி. திருநாவுக்கரசு அம்மையார்** பெரிதும் வருந்தினர். தமிழிலுள்ள திருக்குறளைப் போல்வதோர் அறநூல் உலகிலே எம் மொழியிலும் இல்லை என்பதையும் உணரலாயினர். எனவே, தாமே

அதன் காப்பாளராகவிருந்து அதற்கு ஒல்லும் வகையில் உதவி புரிந்தனர்.

என் உள்ளத்திலே அரும்பிய எனது கருத்தை உடன் பிறந்தார்போல் பழகிவந்த நண்பர் திரு காழி சிவ கண்ணுசாமிப் பிள்ளையிடம் தெரிவித்தேன். அவர் பி. ஏ. பட்டம் பெற்றுச் சென்னை அஞ்சல்துறைத் தலைமைச் செயலகத்தில் தலைமை எழுத்தரா யிருந்தார். சீர்காழித் தமிழ்ப் பெரும்புலவர் ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்களிடம் பாடங் கேட்டுத் தருமபுரவாதீன வித்துவானாக விளங்கினர். இருவருங் கலந்து பேசியதன் விளைவே 'திருவள்ளுவர் திருநாட்கழக'த்தின் தோற்றமாகும்.

தமிழ்ப் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் தலைவராகவும், திரு தி. சிவராம சேதுப்பிள்ளை எம்.ஏ., பி.எல்., திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., டாக்டர் எசு. கிருட்டிணசாமி ஐயங்கார், தவத்திரு எச். ஏ. பாப்ளி, திரு வி. கலியாணசுந்தர முதலியார் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும் வித்துவான் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் செயலராகவும், காழி சிவகண்ணுசாமி பிள்ளை, பி.ஏ., தி. செங்கல்வராய பிள்ளை, பி.ஏ., எல்.டி., மா. பாலசுப்பிரமணிய முதலியார் ஆகிய மூவரும் துணைச் செயலாளர்களாகவும், புலவர் மயிலை சிவமுத்து, தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், த. செங்கல்வராயன், மணி கோடீசுரமுதலியார், காஞ்சி மணிமொழியார், ஈ. த. இராசேசுவரி அம்மையார் முதலியோர் உறுப்பினர்களாகவும், யான் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றுத் 'திருவள்ளுவர் திருநாட்கழகம்' 1935 தைத் திங்களில் பணியாற்றத் தொடங்கிற்று.

சென்னைப் பவளக்காரத்தெரு, சைவசித்தாந்தக் கழகக் கட்டடமே திருநாட் கழகத்துக்குப் பணிமனையாக உதவப் பெற்றது. திருவள்ளுவர் திருநாளை மிகவுஞ் சிறப்பாகச் சென்னையிலே கொண்டாடவும், தமிழ் நாடெங்கணும் அதே நாளில் கொண்டாடச் செய்யவும் 'திருவள்ளுவர் நினைவு மலர்' ஒன்று வெளியிடவும் திட்டம் வகுத்துத் திருவள்ளுவர் திருநாட் கழகத்துக்குக் காப்பாளர்களும், வாழ்நாள் உறுப்பினர்களும் சேர்க்கப் பெற்றனர்.

முதலாண்டு திருவள்ளுவர் விழா 1935 மேத் திங்களில் 18, 19 ஆம் நாள்களில் சென்னை-1, பச்சையப்பன் கல்லூரி மண்டபத்திலே மறைத்திரு மறைமலையடிகளார் தலைமையில் மிகவுஞ்

1330 திருக்குறட் பாக்களினின்றும் நாளொன்றுக்கு ஒரு குறள் ஆமாறு 366 குறள் மணிகளைத் தேர்வதெனத் துணிந்தனர். எக் குறளை எடுப்பது எதனை விடுவது என்ற தடுமாற்றம் அவருள்ளத்திலே எழுந்தது. எனினும், ஒருவகை முடிவுக்கு வந்து ஓராண்டு 366 நாள்கட்கும் 366 குறள் மணிகளை எடுத்துத் 'திருக்குறள் நாட்குறிப்பு' (Thirukkural, a gem for each day) என்றதொரு நூல் அச்சிடக் கருதினர். தாம் தொகுத்த 366 குறள்மணிகட்கும் உரைநடையில் ஆங்கில ஆக்கமும் இயற்றினர். நாள் ஒன்றுக்கு ஒரு குறளும் அதன் ஆங்கிலமுமாக 12×9 செ. மீ. அளவில் நாட்குறிப்புப் போல் 1. சனவரி, 2. சனவரி (1st January, 2nd Jauuary) என்று நாளும் திங்களுமாக அமைத்து அச்சிட்டு 1915 திசம்பரில் வெளியிட்டனர். இப்படி ஒரு நூலை ஆக்கி வெளியிட வேண்டுமென்று தாம் கருதியதேன் என்பதைத் தமது ஆங்கில முன்னுரையில் விளக்கியுமுள்ளனர்.

நாட்குறிப்புக்கு வேண்டிய பிற குறிப்புகள் ஒன்றும் அதன்கண் கொடுக்கப்பெறவில்லை எனினும் அந்நூலே கழக வழித் 'திருக்குறள் நாட்குறிப்பை' வெளியிடுவதற்கு வழிகாட்டியாயிற்று என்பது உண்மை. அதனல் முதற்கண் அவ்விழுமிய அருட்பண்புடைய அம்மையார்க்கு நன்றி தெரிவித்துப் பின் கழகம் வெளியிட்டுவரும் **திருக்குறள் நாட்குறிப்**'பைப் பற்றி விளக்குவாம்.

உலகப் பொதுமறையாந் திருக்குறளை நாட்குறிப்பின் வழிப் பரப்புதலே சிறந்த முறையென யானும் என் அருமைத் தமையனார் திருவரங்கனாரும் கருதினோம். ஆகவே, 1931 ஆம் ஆண்டிறுதியில் 1932ஆம் ஆண்டுக்குரிய நாட்குறிப்பினை அழகிய வெண்மைத் தாளில் $12 \times 8\frac{1}{4}$ செ.மீ. அளவில் அச்சிட்டு முதன்முதல் வெளியிட்டோம். ஒவ்வொரு பக்கத் தலைப்பிலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆண்டு திங்கள் நாள் ஆகியனவும், அதன் கீழ்ப் பிறை, மீனம், நிறைநிலா, மறைநிலா முதலிய குறிப்புகளும், அதற்குக் கீழ்க் கருத்துரையோடு ஒரு குறள் மணியும் அமைக்கப் பெற்றன. திருக்குறள் நாட்குறிப்பின் முகப்புப் பக்கங்களில் நாளட்டவணை, சிறப்பு நாள்கள், அரசு விடுமுறை நாள்கள், அஞ்சற் குறிப்புகள் முதலியனவும் சேர்க்கப்பெற்றன. 1932ஆம் ஆண்டு நாட்குறிப்பில் 1330 குறட்பாக்களிலிருந்து 366 குறள் மணிகள்மட்டும் முறைமையினல்லாமல் இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தேர்ந்து சேர்க்கப்பெற்றன.

அடுத்த 1933ஆம் ஆண்டு முதல் திருக்குறள் 1330 திருக் குறட்பாக்களை முதலிலிருந்து முறையாக வெளியிடக் கருதி ேனோம். எனவே, 1933ஆம் ஆண்டு நாட்குறிப்பில் முதல் 365 குறள் மணிகளும் 1934 ஆம் ஆண்டு நாட்குறிப்பில் அடுத்த 365 குறள் மணிகளும், 1935 ஆம் ஆண்டு நாட்குறிப்பில் அதற்கு அடுத்த 365 குறள் மணிகளும் வெளியிடப்பெற்றன. 1936ஆம் ஆண்டு நாட்குறிப்பில் எஞ்சியுள்ள முதல் 235 பக்கங் களில் இறுதி 235 குறள் மணிகளையும் அமைத்து எஞ்சிய 131 பக்கங்களில் கற்றறிந்தோர் ஏத்துங் கலித்தொகையி லிருந்து கருத்துச் செறிவுள்ள குறள் போன்ற 131 ஈரடிகள் தேர்ந்தமைக்கலாயின. நான்கு ஆண்டுகளில் திருக்குறள் முழுமையும் நாட்குறிப்பில் வெளியிடும் இந்த முறை தொடர்ந்து கடைப்பிடிக்கப் பெறுகின்றது. 1933 முதல் 1972 முடிய 40 ஆண்டுகளில் திருக்குறள் முழுமையும் **பத்துமுறை** வெளியிடப் பெற்றுள்ளது.

இதனை ஆண்டுதோறும் கலிக்காத் துணிக் கட்டடமும் பெருமக்கள் சிலர்க்கு அன்பளிப்பாக வழங்குவதற்கு ரெக்சைன் கட்டடமும் செய்து வெளியிட்டு வருகின்றோம்.

இந்த நாட்குறிப்புப் பிற நாட்குறிப்புக்களை விடத் திருக் குறளைப் பொருள் விளக்கத்தோடு கற்பதற்கு மிகுதுணை புரியுமாதலால் இதனைத் தமிழ் நன்மக்கள் பலர் தம் நாட்குறிப் புக்களை எழுதுவதற்குப் பயன்படுத்துவாராயினர். பெருமதிப் புக்குரிய **டாக்டர் ப. சுப்பராயன், சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார்** ஆகிய இருவரும் திருக்குறள் நாட்குறிப்பையே பயன்படுத்தி வந்தனர். ஒருமுறை டாக்டர் ப. சுப்பராயன் அவர்கட்கு அனுப்பப்பெற்ற நாட்குறிப்பை அவரது நேருதவியாளர் பெற்றுக் கொண்டு அதனை உரியவரிடம் சேர்ப்பிக்க மறந்து விட்டனர். டாக்டர் அவர்கள் தமக்கு வழக்கமாக அனுப்பி வைக்கப்பெறும் திருக்குறள் நாட்குறிப்பு இவ்வாண்டில் வரப்பெறவில்லையே என்று எழுதினர். உடனே வேறு படி ஒன்று அனுப்பி வைக்கப்பெற்றது. பின்னர் முன் அனுப்பப்பெற்ற படியும் தமக்கு நேர்உதவியாளரிடமிருந்து கிடைக்கப் பெற்றதாகத் தெரிவித்தனர். மதிப்புமிக்க சி. சுப்பிரமணியம், ஜே. சிவசண்முகம் பிள்ளை, தி. சு. அவிநாசி லிங்கஞ் செட்டியார் முதலியோரும் திருக்குறள் நாட் குறிப்பையே பயன்படுத்துகின்றனர். திரு செட்டியாரவர்கள் இன்பப்பாலிலுள்ள குறட்பாக்கள் வரக்கூடிய அந்த ஆண்டு நாட்குறிப்பை மட்டும் பயன்படுத்துவதில்லை என்பது வியப்பைத் தருவதாகும்.

1940ஆம் ஆண்டில் சென்னைக் கிளை நிலையத்தில் தலைமை எழுத்தராகவிருந்த திரு சுப்பராயலு நாயுடு பள்ளிக் கல்வி இயக்குநரலுவலகத்தில் கழகப் பாடநூல்களைச் சேர்ப்பிக்கும் பொருட்டுப் போயிருந்தார். அப்போது மேற்பார்வையாளராக விருந்த திரு கலியாணராமையரிடம் கழகம் வெளியிட்ட திருக்குறள் நாட்குறிப்பை அன்பளிப்பாக வழங்கினர். அதனைக் கண்டதும் அவர் மிகவும் வியந்து மகிழ்ந்து திருக் குறள் நாட்குறிப்பு வெளியிட வேண்டுமென்னுங் கருத்து உங்கட்கு எவ்வாறு தோன்றியது என்று கேட்டனராம். அதற்கு "எங்கள் முகவர் திருக்குறளில் மிகவும் ஈடுபாடு உடையவர்; நாட்குறிப்பின்வழித் திருக்குறளைப் பரப்புதல் வேண்டும் என்று 1932 முதல் கழகவழித் திருக்குறள் நாட் குறிப்பை வெளியிட்டு வருகின்றனர்" என்று திரு நாயுடு கூறினாராம். அதைக் கேட்டதுமே அவர் தமது பாராட்டினை அஞ்சல் அட்டையில் எழுதி எனக்கு அனுப்பி வைத்தனர். கழகத்தின் பணிகளுக்குத் தம்மால் ஒல்லும் உதவிகளை யெல்லாம் மனமுவந்து செய்வதாகக் கூறி அங்ஙனமே செய்து வந்தார். மேலும், அதுமுதல் அவர் என்னிடம் மிகுந்த அன்பு காட்டி வந்தனர். ஒருநாள் தமது இல்லத்துக்கு வருமாறு என்னை அழைப்பித்து விருந்து அளித்தனர். என் அன்பர்க ளாகிய தகுதியுடைய தமிழ்ப்புலவர் சிலரைத் தேர்வாளராக அமர்த்துமாறு யான் வேண்டியபோது மறுமல் செய்துதவினர். இங்ஙனமே திருக்குறள் நாட்குறிப்புப் பல பெருமக்களின் உள்ளங் கவர்ந்து, பல நன்மைகளைக் கழகம் பெற்று வருகிற தென்று சொன்னால் அது மிகையாகாது.

1932 முதல் இதுகாறும் திருக்குறள் நாட்குறிப்பு ஆறு நூறாயிரம் படிகளுக்குமேல் அச்சிடப்பெற்றுத் தமிழ் மக்கட்குப் பயன் விளைத்து வருகின்றது. இது திருக்குறளைப் பரப்பு தற்குக் கழகம் செய்துள்ள பெருந் தொண்டாகுமன்றோ!

**திருவள்ளுவர் திருநாட் கழகம், திருவள்ளுவர் நினைவு மலர்**

ஊர்கடோறும், பள்ளிகடோறும் திருவள்ளுவர் கழகம் நிறுவித் திருவள்ளுவர் திருநாளை ஆண்டுதோறும் கொண் டாடுதல் வேண்டுமென்று என் உள்ளத்திலே தோன்றியது. 1927 இல் முதன்முதல் நிறுவப்பெற்ற 'தென்காசித் திருவள் ளுவர் கழகம்' ஆண்டுதோறும் திருவள்ளுவர் விழாவைச் சிறப் பாகக் கொண்டாடுகின்றது. டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அவ்விழாவை யடுத்துத் 'திருவள்ளுவர் நினைவு மலர்' அச்சிட்டு வெளியிடப் பெற்றது. அதன்கண் திருக்குறள் 1330 பாக்களும், திருமயிலையிலுள்ள திருவள்ளுவர் திருக்கோயில், அதனுள் எழுந்தருளியிருக்கும் திருவள்ளுவர் திருமேனி இவற்றின் படங்களும், அற்றை நாள்வரை திருக்குறளைப் பதிப்பித்தல், அதற்கு உரை எழுதுதல், அதனை ஆய்ந்து கட்டுரை வரைதல், அதனைப் பிறமொழி களில் பெயர்த்தல் ஆகிய துறைகளில் தொண்டாற்றிய அறிஞர் பெருமக்களின் உருவப்படங்கள் முதலியனவும், திருக்குறள் பயின்ற முதுமொழி வெண்பா போன்ற நூல்களிலிருந்து போலிகையாக ஒவ்வொரு செய்யுளும் தமிழிலும் பிற மொழி களிலும் வெளியிடப்பெற்ற திருக்குறள் பதிப்புக்களைப் பற்றிய விளக்கக் குறிப்பும், தமிழ் நாட்டறிஞர்களும், பிறநாட்டறிஞர் களும் கூறிய புகழ்ப் பூந்துணர்களும், இசைப்பாக்களும் முதலாண்டு விழாத் தலைவர் மறைத்திரு மறைமலையடிகளார் ஆற்றிய தலைமையுரையும் கண்கவர் வனப்புடன் அச்சிடப் பெற்றுள்ளன.

திருவள்ளுவர் திருநாட் கழகத்தினர் விரும்பிய வண்ணம் தமிழகத்தில் பல ஊர்களிலும், பல பள்ளிகளிலும், பிற நிலையங் களிலும், பிற நாடுகளிலுள்ள சிற்சில ஊர்களிலும் அதே நாளில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப் பெற்றது. திருவள்ளுவர் கழகங்கள் பல ஆங்காங்கே நிலையாக நிறுவப் பெற்றுள்ளன.

இரண்டாவது ஆண்டு திருவள்ளுவர் விழா 1936 சூன் திங்களில் சென்னைப் பச்சையப்பன் மண்டபத்திலே முதுபெரும் புலவர் டாக்டர் வே. சாமிநாதையர் தலைமையிலும், மூன்ருவது ஆண்டு விழா 1937 மேத் திங்களில் இராமநாதபுர மாவட்டம் பாகனேரியில் கோவை, சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் தலைமையிலும் நடைபெற்றன.

திருவள்ளுவர் 'திருநாட்கழகப் பணிமனை'யாகச் சைவ சித்தாந்தக் கழகக் கட்டடத்தை வைத்துக் கொண்டு பொறுப்பான பணிகளெல்லாம் என்னிடமே ஒப்புவிக்கப் பெற்றன. அச்சிடப்பெற்ற திருவள்ளுவர் நினைவு மலர் 5000 படிகளில் உறுப்பினர்கட்கெல்லாம் அன்பளிப்பாக வழங்கப் பெற்றனவும் விற்பனையாயினவும் போக 2000 படிகள் விற்கப் பெருமல் தங்கிவிட்டன. அதற்கு அடக்கவிலை 9 அணு வைக்கப் பெற்றதால் அதனை அச்சிட்டுத் தந்த அச்சகத்தார்க்கு ரூபா ஆயிரம் வரை கொடுக்க முடியாமல் நின்று விட்டது. அதனால்

திருவள்ளுவர் திருநாட்கழகத்தைத் தொடர்ந்து நடத்த முடியாமல் நிறுத்த வேண்டிய நிலையுற்றது. எஞ்சிய மலர்ப் படிகளை 4 அணு விலை வைத்தும் விற்கலாயிற்று. ஆயினும், படிகள் யாவும் விற்கப் பெறவில்லை. 1942இல் இரண்டாவது உலகப் போர் முடிந்தபின் எஞ்சியுள்ள மலர் படி ஒன்றுக்கு ரூபா ஒன்று விலை வைத்து விற்று அச்சகத்தார்க்குக் கொடுக்க வேண்டிய கடன் தீர்க்கப் பெற்றது.

திருவள்ளுவர் விழாவைப் பல ஊர்களில் கொண்டாடத் தக்க விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் திருநாட் கழகத்துக்குச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகமும், அதன் ஆட்சியாளரும் செய்த தொண்டு யாவரும் நினைந்தின்புறுதற் குரியது.

**திருக்குறள் மூலம் (மிகச்சிறிய miniature பதிப்பு)**

1920 ஆம் ஆண்டில் பாளையங்கோட்டையில் எனக்கு உறவினரும் வழக்குரைஞருமாக விருந்த திரு சி. பி. சுப்பையா பிள்ளை இல்லத்திற்கு ஒருநாள் சென்றிருந்தேன். அங்கே திருக்குறளில் நல்ல புலமையுடைய தச்சநல்லூர் திரு இலக்குமண போற்றி ஐயா வந்திருந்தனர். அவர் சேம்சு ஆலன் எழுதிய 'Daily meditations' என்ற ஆங்கில நூலைத் தமிழில் மொழிபெயர்த்து 'நித்தியானு சந்தானம்' என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ளனர். திரு சி. பி. சுப்பையா பிள்ளை தமது உள்ளங்கைக்குள் ஏதோ ஒன்றை வைத்து மூடிக்கொண்டு என்னை நோக்கித் "தம்பி! என் கைக்குள் இருப்பது என்ன? சொல்லும் பார்ப்போம்" என்று கேட்டனர். யான் அதற்கு "என்ன அண்ணு? எனக்குக் குறி சொல்லத் தெரியாதே" என்றேன். உடனே உள்ளங்கையை விரித்ததும் ஒதெல்லோ என்னும் செகப்பிரியர் எழுதிய நாடகநூல் மிகச்சிறிய (miniature) 5×4 செ.மீ. அளவில் இருப்பதைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் எய்தினேன். நாடக முழுமையும் மிகச் சிறிய எழுத்தில் மெல்லிய தாளில் அச்சிடப் பெற்றிருந்தது. அதே அளவில் செகப்பிரியர் எழுதிய நாடகங்கள் அனைத்தும் அச்சிடப் பெற்றுள்ளன எனவும் சொல்லக் கேட்டு எல்லையில்லா மகிழ் வெய்தினேன். அப்போது நம் தெய்வத் திருக்குறள் இந்த அளவில் வெளிவரின் எவ்வளவு நன்றுயிருக்கும் என்று கூறினேன். அவ்விருவரும் அதனைக் கேட்டு என்னைத் தட்டிக் கொடுத்துப் புன்முறுவல் காட்டினர்.

திருவருளால் எனக்கு என் தமையனர் நிறுவிய கழகத்திலே 1921 முதல் சென்னைக் கிளைநிலைய முகவராகப் பணியாற்றும்

பொறுப்புக் கிடைக்கப் பெற்ற காலமுதல் செகப்பிரியரின் ஒதெல்லோ நாடக நூல்போல் திருக்குறள் மூலத்தை வெளியிட வேண்டுமென்ற எண்ணம் என் உள்ளத்திலே கனிந்து கொண்டே இருந்தது. தமிழில் அதே அளவில் அச்சிடுவதற்கேற்ற மெல்லிய தாளும் மிகச் சிறிய தமிழ் அச்செழுத்தும் கிடைக்கப்பெருமையால் காலங் கடந்து வந்தது. 1942 இல் திருக்குறள் மூலத்தை $6 \times 4\frac{1}{2}$ செ. மீ. அளவில் அச்சிடுவதற்கேற்ற தாளும் அச்செழுத்தும் கிடைக்கப் பெற்றன. என் கெழுதகை நண்பர் திரு. காஞ்சி மணிமொழியார் தமது பொறுப்பிலிருந்த செங்குந்த மித்திரன் அச்சகத்திலே என் விருப்பப்படி அச்சிட்டுக் கொடுத்தனர். அதனுல் கழகத்துக்குக் கிடைத்த புகழில் அவருக்கும் பங்கு உண்டு. அதனை அட்டைக் கட்டடஞ் செய்தும், ரெக்சைன் கட்டடஞ் செய்தும் வெளியிட்டுப் பெருமக்கள் பலருடைய பாராட்டுக்களைப் பெற்றேன். சில படிகள் வெள்ளிக் கட்டடம் செய்து விற்கப்பெற்றன. கழகத் தலைவர் திரு மு. காசி விசுவ நாதன் செட்டியாரவர்கள் அதனைத் தங்கக் கட்டடஞ் செய்து வைத்திருப்பது அவர்கட்குத் திருக் குறளின்பாலுள்ள பெரும் பற்றினைக் காட்டுகிறது. அவர் தமது ஊர் பாகனேரியில் 'திருவள்ளுவர் நூல்நிலையம்' ஒன்றை நிறுவித் தாம் தொகுத்த பதினுயிரத்துக்கு மேற்பட்ட நூல்களையெல்லாம் அதற்கு வழங்கியுள்ளனர்.

நடுவணரசு சிறந்த முறையில் அச்சிடப்பெற்ற நூல்கட்குப் பரிசு வழங்குந் திட்டத்துக்கு மிகச் சிறிய அளவில் அச்சிடப் பெற்ற இஃது உயர்ந்த கட்டடஞ் செய்து அனுப்பி வைக்கப் பெற்றது. 1956 இல் அதனைப் பாராட்டிக் **குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சர் இராதாகிருட்டிணன்** அவர்களால் சான்றிதழும் பரிசும் வழங்கப்பெற்றன.

ரெக்சைன் கட்டடம் செய்யப்பெற்ற இத்திருக்குறளை நகைச்சுவை நடிகர் என். எசு. கிருட்டிணன் 1953 இல் தாம் நடித்த 'பணம்' என்ற படத்தில் தமது வலக்கைச் சுட்டு விரல் பெருவிரல்களுக்கிடையே இடுக்கித் தூக்கிக் காட்டி ''இதோ உலகம் பாருங்கள்'' என்று மக்கட்குப் பெரு வியப்பையும் மகிழ்வையும் ஊட்டினர். அந்தச் சிறிய அளவில் திருக்குறளை வெளியிடுவதற்கு முதன்முதல் எண்ணத்தைத் தூண்டிய 'ஒதெல்லோ நாடகம்' போன்றதொரு நூல் கழக நூற்காட்சியில் வைப்பதற்கு வேண்டுமே என்று யான் பலகால் எண்ணியதுண்டு.

*"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்*
*திண்ணிய ராகப் பெறின்"*

என்ற வள்ளுவர் வாய்மொழி பொய்க்குமா? பொய்க்காதன்றே! யான் எண்ணியவாறே 1959ஆம் ஆண்டில் 'அதேன்சு நகரத்துத் தைமன்' (Timon of Athens) என்ற செகப்பிரியர் நாடக நூல் கிடைக்கப் பெற்றுப் பேருவகையடைந்தேன். அது மறைமலையடிகள் நூல்நிலையத்திலுள்ள காட்சிப் பொருள்களோடு வைக்கப் பெற்றிருக்கிறது. அந்நூல் எனக்குக் கிடைத்த வரலாறுமே சுவையுடையதொன்றாதலின் அதனை அறிவிக்குங் கடப்பாடுடையேன்.

1959 இல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தேர்வு மண்டபத்தில் பல்கலைக் கழக நூலகத்தின் சார்பில் நூற்காட்சியமைக்கப் பெற்றது. பல்கலைக் கழக நூலகமும், அரசு கையெழுத்துப்படி நூலகமும், பச்சையப்பன் கல்லூரி நூலகமும் தம்மிடமுள்ள அரிய நூல்களையும் கையெழுத்துப்படிகளையும் கொண்டு வந்து காட்சியமைத்தன. ஆங்கில நூல் பதிப்பகங்களும் தமிழ் நூற்பதிப்பகங்களும் அவ்வாறே தம்மிடமுள்ள நூல்களைக் கொண்டு வந்து வைத்தன. கழகமும் அவ்வாறே தான் வெளியிட்ட இலக்கிய நூல்களையும் அறிவியல் நூல்களையும் கொண்டு போய் வைத்தது. பச்சையப்பன் கல்லூரி அமைத்துள்ள காட்சியில் முன்னே குறிப்பிட்ட செகப்பிரியர் ஒதெல்லோ நாடகநூல் அளவில் 12 செகப்பிரிய நாடக நூல்கள் இருந்தன. அவற்றைக் கண்டவுடன் யான் அடைந்த மகிழ்ச்சிக்கோர் அளவில்லை. பச்சையப்பன் கல்லூரி நூலகர் என் கெழுதகை நண்பர் திரு. செங்கல்வராயன் அவர்களிடம் இந்த நாடக நூல்கள் யாருடையவை என்று கேட்டேன். அவை பித்தாபுரம் இராசா அவர்களுடையவை என்றும், அவருடைய பேரர் தமது கல்லூரியில் படிக்கிறார் என்றும் அவர் வாயிலாகக் காட்சியில் வைக்கப் பெற்றன என்றும் கூறினார்.

அவரிடம் ஏதாவதொரு நாடகத்தை மட்டும் மறைமலையடிகள் நூல் நிலையத்திலுள்ள நூற்காட்சியரங்கிலே வைப்பதற்குக் கட்டாயம் வாங்கித் தருமாறு அதற்குரிய காரணத்தை எடுத்துச் சொல்லி இறைஞ்சி வேண்டினேன். எனது வேண்டுதலை ஏற்றுப் பித்தாபுரம் இராசாவிடம் இசைவு பெற்று 'அதேன்சு நகரத்துத் தைமன்' (Timon of Athens) என்னும் நாடகநூலை வாங்கி மறைமலையடிகள் நூல் நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அஃது எண்ணியபடி கிடைக்கப்பெற்றதும் எத்துணை இன்பம் அடைந்

திருப்பேன் என்பதை யான் சொல்லாமலே உணர்ந்து கொள் வீர்கள். அதனைப் பொன்னேபோல் போற்றி ஒரு கண்ணுடிப் பெட்டகத்தில் கழகக் கையடக்கக் குறள் பதிப்புடன் வைத்திருக் கின்றேன். வெளியிடங்களில் திருக்குறள் காட்சி யமைக்கும் போது திருக்குறள் நூல் தொகுப்பில் அந்த நாடக நூல் 'இந்த நூல்தான் மிகச் சிறிய அளவிலுள்ள கழகப் பதிப்பைக் கொண்டு வருதற்கு வழிகாட்டியது' என்று அச்சிடப் பெற்ற குறிப்பட்டையுடன் வைக்கப்பெறுகின்றது.

இதன்கண் திருக்குறளைப் பக்கத்துக்கு ஓரதிகாரமாக ஈரடி களிலே அமைக்க வியலாது. எனவே, ஈரடிகளில் முதலடியை மட்டும் இரண்டிரண்டு சீர்களாக இரண்டு வரிகளில் இடப் பக்கம் ஐந்து பாக்களும் வலப்பக்கம் ஐந்து பாக்களுமாகப் புத்தகத்தைத் திறந்தால் ஒரே பார்வையில் பத்துப் பாக்களும் தெரியுமாறு அமைக்கப்பெற்றுள்ளன. இதன் குறுகிய அளவைப் பார்த்துத் 'தீப்பெட்டிக் குறள்' எனச் சிலர் வழங்குகின்றனர்.

**திருக்குறள் பரிமேலழகருரை:**

திருக்குறளுக்குப் பதின்மர் எழுதிய பழைய உரைகளில் தலை சிறந்தது பரிமேலழக ருரையேயாகும். இலக்கண வரம்பு கெடாமல் செந்தமிழ் நடையில் திருத்தமான உரை நடை எழுத விரும்புவோர் பரிமேலழகருரையினையும் சிவஞான போதச் சிற் றுரையினையும் நெட்டுருச் செய்தல் வேண்டுமென்று நாவலர் வேங்கடசாமி நாட்டாரையாவும், மறைத்திரு மறைமலையடிக ளாரும் கூறுவர். பரிமேலழகர் ஒரு சில குறட்பாக்கட்குத் தமிழ் மரபு, சைவசித்தாந்த மரபுகட்கு மாருக உரை எழுதி யிருப்பதையுஞ் சுட்டிக் காட்டுவர்.

தமிழ் அச்சுமுறை வந்தபின் திருக்குறள் பரிமேலழக ருரையே மீட்டும் மீட்டும் பலராலும் அச்சிடப் பெறுவது கண்கூடு. கழகத்தை நிறுவிய என் அருமைத் தமையனுர் திருவரங்கனுர் அதனை மிகவும் அழகிய முறையில் குறைந்த விலைக்கு அச்சிடுதல் வேண்டுமென்று கருதினர். தமிழிலும் சைவசித்தாந்தத்திலும் பெரும் புலமை சான்ற கழகத் தலைவர் சிவத்திரு மா. வே. நெல்லையப்ப பிள்ளை யவர்கள் எழுதிய 'திருக்குறட் பாயிரக்கருத்து', 'சில குறட்பாக்களுக்கு ஏனை உரையாசிரியர் எழுதிய உரையும் விளக்கமும்', வித்துவான் வே. மாணிக்கவாசகம்பிள்ளை எழுதிய 'அருஞ்சொற் பொருள் விளக்க அகரவரிசை', சாத்தூர் வழக்குரைஞர் திரு தூ. சு. கந்த சாமி முதலியார் (எம்.ஏ.) எழுதிய 'ஆராய்ச்சி முன்னுரை' ஆகிய

வற்றைக் கழகப் பதிப்பிலே சேர்ப்பதற்கு அனுப்பி வைத்தனர். இந்நான்கும் கழகப் பதிப்புக்குச் சிறப்பளிக்கின்றன வெனின் அது மிகையாகாது.

1937ஆம் ஆண்டில் சென்னைப் புரோகிரசிவ் அச்சகத்தில் அதன் மேலாளர் திரு சி. மு. கோவிந்தராச முதலியார் இரவு பகல்வேலை வைத்து 40 நாள்களில் திருக்குறள் பரிமேலழக ருரையினை அச்சிட்டுத் தந்தனர். அச்சிடுகையில் என் கெழுதகை நண்பர் காழி சிவ கண்ணுசாமி பிள்ளை மிகவும் அக்கறையுடன் அதன் மெய்ப்புகளைத் திருத்தியது மறக்கற் பாலதன்று.

அவ்வுரை அச்சிடப் பெற்றதும் மூவகையான கட்டடஞ் செய்யப் பெற்றது. முகப்பிலுள்ள திருவள்ளுவர் வண்ணப் படமும், முகப்பிலும் முதுகிலும் பொன்னெழுத்தால் பொறிக்கப் பெற்ற நூற் பெயரும் கண்ணைக் கவர்ந்தன. அதற்கு மிகவுங் குறைந்த விலை ரூ 1-50 வைக்கப் பெற்றது. பரிசு வழங்குதற் பொருட்டு இரு வகையான உயர்ந்த கட்டடமும் செய்யப் பெற்றது.

உயர்ந்த ரெக்சைனுலாய புற அட்டைகள் வட்ட மூலையும் ஏட்டு விளிம்புகள் சிவப்புச் சாய மெருகும் கொண்டன. முதுகில் நூற் பெயரும் பூக்கட்டையும், முகப்பில் உலகப்படமும், நூற் பெயரும் பொன்னிதழால் அழுத்தப் பெற்றுக் கவின்மிகு தோற்றம் அளித்தன. அதற்குக் குறைந்த விலை ரூ 4-00.

மற்றொரு பரிசுப்பதிப்பு ரெக்சைனுலாய அட்டைகள் வட்ட மூலையுடன் மடிப்பு விளிம்பும், ஏட்டு விளிம்புகள் பொன் பூச்சும் கொண்டன. அதற்குக் குறைந்தவிலை ரூ 5-00. இவ்விரண்டு பரிசுப் பதிப்புகளும் முதுகு மட்டும் தெரியும்படி அட்டைப் பெட்டிகளில் அமைத்து விற்கப்பெற்றன.

இவ்விரண்டும் மேலை நாட்டு விவிலிய நூல் (Bible) போல மக்கள் உள்ளத்தைப் பெரிதுங் கவர்ந்தன. தமிழில் இதுகாறும் இதுபோல் எந்த நூலும் உயர்ந்த கட்டடம் பெறவில்லை என்று யாவரும் போற்றுவாராயினர்.

யான் கோவைக்குச் சென்றிருந்தபோது பரிசுப் பதிப்பில் ஒரு படியினைத் தாளுறையில் வைத்துக் கோவைக்குப் புகழூட்டிய பெருமகனார் திவான்பகதூர் சி. எசு. இரத்தின சபாபதி முதலியாரைக் காணச் சென்றேன். என் அன்பிற்குகந்த திரு நடராசபிள்ளை என்னோடு வந்தனர். திரு முதலியாரவர்களைக் கண்டவுடன், ''ஐயா, தங்கட்குத் திருக்குறள் பரிமேலழகருரை

கழகப்பதிப்பு கொண்டு வந்திருக்கிறேன்' என்று சொன்னேன். அவர்கள் தம்மிடம் பல பதிப்புகள் இருக்கின்றனவே என்றார்கள். உடனே யான் கழகப் பதிப்பினைத் தங்களிடங் காட்டுவதற்காகவே கொண்டு வந்திருக்கிறேன் என்று சொல்லித் தாளுறையிலிருந்து புத்தகத்தை எடுத்துக் காட்டினேன். அதனைப் பார்த்ததும் பெருமகிழ்வடைந்து என்னைக் கட்டிப் பிடித்துத் தழுவிக்கொண்டு இதுகாறும் தமிழில் எந்தப் புத்தகத்தையும் இத்தகைய அழகிய கட்டடத்தில் பார்க்கவில்லை. அந்தக் குறையினை நீர் நீக்கிவிட்டீர். அதற்காக உமக்குத் தமிழ் மக்கள் பெரிதுங் கடமைப்பட்டுள்ளனர். புகைவண்டி முதல் வகுப்பில் செல்லுங் காலங்களில் கிறித்தவப் பாதிரியார் சிலர் அழகிய விவிலிய நூலைத் தம் கையில் வைத்துப் போற்றிப் படித்து வருதலைக் கண்டு இதைப் போல் நம் தெய்வத் திருக்குறள் உயர்ந்த கட்டடஞ் செய்யப் பெற்று வரவில்லையே என்று நினைப்பதுண்டு. அந்தக் குறையினை நீர் போக்கியதற்கு யான் யாது கைம்மாறு செய்யமாட்டுவேன் என்று வியந்து மகிழ்ந்து கூறி அதற்குரிய விலையினைத் தந்தனர். 'கைம்மாறு பாராட்டுரையாக இருப்பின் மகிழ்வேன்' என்றேன். பிறகு எழுதியனுப்புவதாகக் கூறி அவ்வாறே நல்லதொரு பாராட்டுரை அனுப்பிவைத்தார்கள். அவர்கள் அன்று காட்டிய மதிப்பையும் அன்பினையும் என்னிடம் இறுதிவரை காட்டி வந்தனர்.

இராசா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் மணிவிழா செட்டி நாட்டில் 28-9-1941இல் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. தமிழகவரசு தலைமைச் செயலகத்தில் கல்வித்துறை உதவிச் செயலர் திரு இராமச்சந்திர ஐயர் 27-9-41 மாலை கழகத்துக்கு வந்து திருக்குறள் பரிசுப் பதிப்பு வேண்டுமென்றார்கள். அப்போது பரிசுப் பதிப்பு கையிருப்பில் இல்லாமையால் உயர்தரத் துணிக் கட்டடமுள்ள பதிப்பினையே வாங்கினர். அதனை இராசா சர் அவர்கட்குப் பரிசளிப்பதற்காகவே வாங்குகின்றனர் என்பதைத் தெரிந்து கொண்டேன். அவர்கள் சென்றதும் என் நண்பர் காழி சிவ கண்ணுசாமி பிள்ளை வந்தனர். அவர்கட்கு அன்பளிப்பாகக் கொடுக்கப் பெற்ற பரிசுப் பதிப்பினைக் கேட்டுப் பெற்றுக் கழகப் பணியாளன் வழி ஆழ்வார் பேட்டையிலுள்ள திரு இராமச்சந்திர ஐயர் அவர்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்தேன். அவர்கள் எழும்பூர் புகைவண்டி நிலையத்துக்குப் போய்விட்டமை தெரிந்து பணியாளன் நிலையத்துக்குச் சென்றனன். அப்போதுதான் வண்டி புறப்பட்டுப் போய்விட்டமையால் பரிசுப் பதிப்பினைக் கொடுக்க இயலவில்லை. (தொடரும்)

—வ. சுப்பையா.

# இறைமையில் இசைந்த வாழ்வு

[திரு. மா. சண்முக சுப்பிரமணியம்]

## அமைதியான மனமும் அளவில்லா ஆற்றலும்

உள்ளத்து உணர்ச்சிகள் :

நான்கு வயது குழந்தை. விளையாட்டுப் பொம்மை ஒன்று வேண்டுமென்று நம்மிடம் கேட்கின்றது. நாம் வாங்கிக் கொடுக்கவில்லை. உடனே, அக்குழந்தைக்கு எவ்வளவு கோபமும் வருத்தமும் வருகின்றன! பொம்மை வேண்டு மென்று அழுகின்றது. கோபத்தால் தரையில் கிடந்து உருளுகின்றது. கைகளையும் கால்களையும் உதறிக்கொண்டு அடம் பிடித்துக் கத்துகின்றது. அடுத்த நாள் அழகான பொம்மை ஒன்றை அதற்கு வாங்கிக் கொடுக்கின்றோம். உடனே அதற்கு எத்தகைய மகிழ்ச்சி! ஆனந்தத்தால் அது குதிக்கிறது. அதிகமான மகிழ்ச்சியால் பொம்மையை எடுத் துக்கொண்டு அங்குமிங்கும் ஓடுகிறது. இவ்வாறு, மகிழ்ச்சி யையோ துயரத்தையோ குழந்தைகள் நன்கு வெளிக்காட்டி அழுகின்றன, ஆடுகின்றன, குதிக்கின்றன, கும்மாளம் போடு கின்றன. இது குழந்தைகளின் இயல்பு.

ஆனால், வயது வந்த நாம் என்ன செய்கின்றோம்? ஆடிப் பாடிக் குதிப்பதில்லை, தரையில் கிடந்து உருளுவதில்லை என்பதைத் தவிர, குழந்தையின் குணமே நம்மிடமும் உள்ளது. எதிர்பார்த்தது கிடைக்க வேண்டுமே என்று ஏங்குகின்றோம். அது கிட்டிவிடில் எக்களிப்புக் கொள்ளுகின்றோம். நாம் வேண்டாதது நடந்துவிடக்கூடாதே என்று கவலைப்படு கின்றோம். அது நடந்துவிட்டாலோ துயரப்படுகின்றோம். நமது உள்ளக்களிப்பையும் உற்ற துயரையும் பல்வேறு விதங் களில் வெளிப்படுத்துகின்றோம். இந்த வகையில் நாமும் வளர்ந்துவிட்ட குழந்தைகளாகவே உள்ளோம்.

குழந்தைகள் தங்கள் துயரையும் களிப்பையும் அப் பொழுதே மறந்துவிடுகின்றன. ஆனால், நாம் நம் களிப் பையோ கவலையையோ எளிதிலே மறப்பதில்லை. சில வேளை களில் மிதமிஞ்சிய களிப்பால் நம் உள்ளம் துள்ளிக் குதிக் கின்றது! கவலையெனில், கருதிக் கருதிக் கவலைப்படுகின்றோம், உழன்று உழன்று துயரப்படுகின்றோம். துயரச் செய்தி யொன்றைத் திடீரெனக் கேள்விப்பட்டவுடனே எத்தகைய

அதிர்ச்சி நமக்கு உண்டாகின்றது! ஒரு காரியத்தைச் சரிவரச் செய்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் எவ்வளவு படபடப்பு நமக்கு ஏற்படுகிறது! நாம் வெறுக்கும் செயல்களைச் செய்தோர்மீது நமக்கு எவ்வளவு கோபம் வருகின்றது! மிகுந்த கோபம் வந்த நிலையில் நம் உடலுறுப்புகள் எல்லாம் துடித்துப் பதறுகின்றனவே!

ஓயாத கவலை, தீராத கோபம், திடீரென்ற அதிர்ச்சி, மிதமிஞ்சிய களிப்பு இவை போன்ற அகவிளைவுகள் எல்லாமே நம் உடலுக்கு ஊறு விளைக்கின்றன என்பது நம் முன்னோர்களும் இன்றைய விஞ்ஞானமும் கண்ட உண்மை. இரத்தக் கொதிப்பும் நரம்புத் தளர்ச்சியும் உணர்ச்சிப் பெருக்கால் விளைகின்றன என்று மருத்துவ நூல்கள் கூறுகின்றன. நம் உணர்ச்சிகள் மிதமாக இருத்தல் வேண்டும் என்று உடல் நலத்துறை வல்லுநர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர்.

**புறநிகழ்வுகளைக் கட்டுப்படுத்தல் இயலாது, அகவிளைவுகளையே அடக்குதல் வேண்டும்:**

களிப்பு, கவலை, துயரம், கோபம் போன்ற அகவிளைவுகள் —உணர்ச்சிகள்—புறநிகழ்வுகளால் தோன்றுகின்றன என்று கண்டோம். புறநிகழ்வுகளை நம்மால் கட்டுப்படுத்த முடியாது. நமக்கு நெருங்கிய உறவினரோ நண்பரோ இறந்துவிட்டால் நமக்குத் துயரம் தோன்றுகிறது. துயரத்தை விளைக்கும் இந்த மரணம் நேராமல் நம்மால் தடுக்க முடியாது.

ஒருவர் நம்மை ஏமாற்றி விடுகின்றார். ஏமாற்றியவர்மீது நமக்குக் கோபம் வருகின்றது. அவர் நம்மை ஏமாற்றாமல் தடுப்பது நம்மால் இயலாது. எங்கோ நடந்த நிகழ்ச்சியை அறிந்ததும் நாம் அதிர்ச்சி அடைகிறோம். அதிர்ச்சி தரும் அந்த நிகழ்ச்சியை நாம் எவ்வாறு தடுக்க முடியும்? எனவே, நம் அகவிளைவுகளுக்கு, உணர்ச்சிகளுக்குக் காரணமான புறநிகழ்வுகளைத் தடுப்பது இயலாததாகும். அகவிளைவு களுக்குக் காரணமான புறநிகழ்வுகள் நடந்துகொண்டேதான் இருக்கும். ஆதலால், புறநிகழ்வுகள் எவ்வாறாயினும் அவற்றால் தோன்றும் அகவிளைவுகளை, உணர்ச்சிகளை நாம் கட்டுப் படுத்திக்கொள்ள வேண்டும்.

புறநிகழ்வுகள் நம் உள்ளத்தைத் தாக்குகின்றன. எனவே, உள்ளத்தில் உணர்ச்சிகள் தோன்றுகின்றன. அவ் வுணர்ச்சிகளின் வேகத்தினால் நம் உள்ளம் வலியிழந்து

விடுகிறது. உணர்ச்சிகளின் வயப்பட்டு நாம் பல செயல்களில் இறங்கிவிடுகின்றோம். அச்செயல்களில் பல நம் அறிவுக்கு உகந்ததாக இருப்பதில்லை. உணர்ச்சியால் உந்தப்படும் மனிதன் தன் அறிவையே இழந்துவிடுகின்றான். இதனால் விளையும் தீங்குகள் எண்ணற்றவை.

பிறர் பொருள்மேல் கொண்ட ஆசையால் அதை ஒருவன் திருடுகின்றான். ஆசையுணர்ச்சி அவன் அறிவைக் கெடுப்ப தால் திருடும் செயலில் அவன் இறங்கிவிடுகிறான். அடங்காத கோபத்திற்கு ஆட்பட்ட ஒருவன் பிறரைத் தாக்கிக் கொடுங் காயங்களை விளைக்கின்றான். கொடுமையான கோபத்தால் சில வேளைகளில் அவன் கொலை செய்வதற்குக்கூடத் தயங்குவ தில்லை. இவ்வாறு, உணர்ச்சிகளால் உந்தப்படுவோர்கள் தம் வயமிழந்த நிலையில் இழிசெயல்களையும் பழிச் செயல்களையும் செய்துவிடுகின்றனர். பிறகு வருந்துகின்றனர்!

உணர்ச்சிகளை நம் உள்ளத்திலிருந்து அறவே அகற்றி விட முடியாது. உணர்ச்சிகள் இன்றி நம் வாழ்வு இல்லை. பல்வகை உணர்ச்சிகளின் இயக்கமே நம் வாழ்வாகின்றது. ஆனால், அவ்வுணர்ச்சிகள் அளவோடு அமைதல் வேண்டும்; அவை மிதமாக இருத்தல் வேண்டும்.

**அமைதியான உள்ளத்தை அடைவது எப்படி?**

நம் உணர்ச்சிகள் மிதமாக இருக்க வேண்டுமெனில் நம் உள்ளத்தில் உறுதியும் அமைதியும் வேண்டும். உணர்ச்சி களின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் உறுதியையும், உணர்ச்சி களால் கலங்கிவிடாத அமைதியையும் நம் உள்ளம் பெற்றி ருத்தல் வேண்டும்.

நம் வாழ்வின் இன்பமும் துன்பமும், வெற்றியும் தோல்வி யும் நம் உள்ளத்தில் உறுதியையும் அமைதியையும் பொறுத்தே அமைகின்றன. உறுதியும் அமைதியும் நம் உள்ளத்தில் இல்லையெனில், உணர்ச்சிகளின் வேகத்தில் நாம் இழுத்துச் செல்லப்பட்டு எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கு இலக்காகிவிடு கின்றோம். அகவிளைவான உணர்ச்சிகளை உறுதியுடன் அடக்கி அமைதி பெறாத உள்ளம் நம்மை அவலக்கடலிலே ஆழ்த்தி விடுகின்றது.

இத்தகைய உள்ளத்து அமைதியை நாம் எய்துவது எப்படி?

இதனை எய்துவது எளிதன்று. புறநிகழ்வுகளால் தோன்றும் பேராசை, பொறாமை, கோபம், பகைமை, கவலை

போன்ற உணர்ச்சிகள் நமது உள்ளத்தை உழலச் செய்து கொண்டே இருக்கின்றன. அகவிளைவுகளான இவ்வுணர்ச்சிகளை அளவோடு நிறுத்தி, உள்ளத்து அமைதியை உறுதி செய்வதற்கான ஒரே வழி இறையுணர்வு என்ற ஈடில்லா அனுபவந்தான்.

**இறையனுபவத்தால் எய்தும் அமைதிநிலை :**

இறையுணர்வு என்ற அனுபவத்திலே உள்ளத்திற்கு வேண்டிய இந்த அமைதிநிலை இயல்பாகவே அடங்கியுள்ளது !

விரிந்த கடலும் பரந்த வானும் கொண்ட இவ்வுலகத்தையும், இவ்வுலகமே ஒரு பந்தாகச் சுழலும் பரவெளியையும், பரவெளியிலே சுழன்று நிற்கும் பல்கோடி அண்டங்களையும் எண்ணி, இவ்வண்டங்களனைத்தையும் தன்னுள்ளடக்கி அவற்றுக்கு அப்பாலாய் நிற்கும் இறைமையையும் எண்ணிப் பார்த்து, அத்தகைய இறைமையோடு நாமும் இணைந்துள்ளோம் என்ற எண்ணத்தினை இதயத்திலே இசைக்கும்பொழுது எத்தகைய இன்பமும் அமைதியும் நமக்கு உண்டாகின்றன !

ஆம். எவ்வளவோ கவலைகளாலும் தொல்லைகளாலும் கலங்கியுள்ள நம் மனம் பரந்த கடலையும் விரிந்த வானத்தையும் எண்ணும்பொழுதே ஓர் இதமான உணர்வினைப் பெறுகின்றது. பரவெளியையும் அதிலே பரவி நிற்கும் இறைமையையும் எண்ணிடும்போது நம் இதயத்திலே இன்ப உணர்வும் தெளிவும் பிறக்கின்றன. அந்த இறைமையோடு நாமும் இணைந்துள்ளோம் என்ற எண்ணத்தை இதயத்தில் இசைத்திடும்போது உள்ளத்தில் உதிக்கின்றதே ஓர் அமைதி நிலை, அதை என்னென்பது !

நாம் ஒவ்வொருவரும் இப்பொழுதே இதைப் பயின்று காணலாம். எல்லையில்லாப் பரவெளியையும் எண்ணற்ற அண்டங்களையும் இத்தனைக்கும் அப்பாலான இறைமையின் தன்மையையும் சிறிதே சிந்தனையில் கொண்டால் போதும். அலையற்ற ஆழ்கடலாய் நம் மனம் அமைதி பெறுகின்றது. இத்தகைய இறைமையோடு நாமும் இணைந்துள்ளோம் என்று எண்ணும்பொழுது அந்த அமைதியோடு இன்பவுணர்வும் சேருகின்றது. இப்பொழுது எத்தகைய அமைதியையும் இன்பத்தையும் நாம் பெறுகின்றோம் ! அதுவும் எவ்வளவு எளிதாகப் பெறுகின்றோம் ! இந்த அமைதி நிலவும் உள்ளத்திலே கவலைக்கும் துயரத்துக்கும் இடமேது ? கோபத்திற்கும்

அதிர்ச்சிக்கும் இடமேது? உள்ளம் ஒடுங்கி அடங்கிய நிலையில் மிதமிஞ்சிய உணர்ச்சிகளுக்கு இடமேயில்லை.

சாதாரணமாக, பொன்னிறமான மாலை வெயிலிலே பரந்து கிடக்கும் கடலைப் பார்த்துக்கொண்டிருந்தாலே போதும், நாம் கவலைகளை மறந்துவிடுகின்றோம். விண்மீன்கள் கண் சிமிட்டும் விண்வெளியைக் காணும்பொழுது நம் துயரங்கள் பலவும் துச்சமாகவே தோன்றுகின்றன. இயற்கைக் காட்சி களுக்கே இத்தகைய தன்மை இருந்தால், இயற்கையனைத் தோடும் கலந்து அதற்கும் அப்பாலாய் உள்ள இறைமையில் இசைந்து நிற்கும்பொழுது இதயத்திலே வேறு உணர்ச்சி களுக்கு இடமேது? இறைமையை ஓர்ந்து கண்டு ஒடுங்கிய உள்ளத்தில் அசையாத அமைதி நிலவுகின்றது.

இவ்வாறு, இறையுணர்வினைப் பயிலும் நாம் பெறும் அனுபவத்தால் நிலைத்த மன அமைதி நமக்குக் கிட்டுகிறது.

இயற்கையனைத்திலும் கலந்து அவற்றுள்ளே ஆடி நிற்கும் இறைமையை எண்ணும்பொழுது நம் உள்ளத்தின் உணர்ச்சி யாட்டங்களெல்லாம் ஓய்ந்துவிடுகின்றன. ஆதலால் தான்,

*"ஆட்டமெல்லாந் தீரஉனது ஆடலையுங் காண்பேனோ"*

—*தாயுமானவர்.*

என்று இறைமையை வேண்டுகின்றது உணர்ச்சியாட்டங் களால் உந்தப்படும் நம் உள்ளம்.

இவ்வாறு, நம் உள்ளம் எய்தும் அமைதியினை ஆங்கிலத் தில் Peace of mind—என்பார்கள். இத்தகைய அமைதியினை "வழிபாடு", "தொழுகை" இவற்றால்தான் பெற முடியும் என்று எல்லாச் சமய நூல்களும் கூறுகின்றன. உண்மையில், எங்குமாய் எல்லாமாய் என்றுமாய் உள்ள இறைமையோடு இணைந்துள்ளோம் என்று எண்ணித் திளைப்பதுதான் "வழிபாடு" என்பதும், "தொழுகை" என்பதும். வெவ்வேறு சமயங்களின் சாத்திரங்கள் வேறுபடலாம், சடங்குகள் மாறு படலாம். ஆனால், ஒவ்வொரு மதமும் கூறும் 'வழிபாட்டின் சாரம்' இறையுணர்விலே திளைத்து இறையனுபவம் பெறுவதே ஆகும்.

இதனை நாம் எங்கும் பயிலலாம், எப்பொழுதும் பயிலலாம். இதற்கெனப் புண்ணிய நதிகளில் ஆட வேண்டாம், புனிதத் தலங்களைத் தேட வேண்டாம். இதற்கு மந்திரங்கள் இல்லை, மாமறைகள் ஏதுமில்லை,

**அமைதிநிலையே அடக்கம் என்ற பண்பாகும் :**

உள்ளத்தின் அமைதி என்றால் உணர்ச்சிகளே அற்றுப் போய்த் தன்னை மறந்து இருக்கும் நிலை அன்று. உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகள் அளவோடு அமைந்துள்ள நிலையைத் தான் அமைதி என்கிறோம். மிதமிஞ்சிய பல்வகை உணர்ச்சி களால் உந்தப்பட்டு அலைகடல் துரும்பாக ஆடி அவதியுறு கின்றது நம் உள்ளம். அலைகடல் துரும்பாக இல்லாமல் ஆழ்கடல் அமைதியுடன் நம் உள்ளம் இருத்தல் வேண்டும். அதுவே உள்ளத்தில் நிலவும் அமைதியாகும்.

இத்தகைய அமைதி நிலையைத்தான் "அடக்கம்" என்ற பண்பாகச் சிறப்பித்துக் கூறுகின்றனர். உணர்ச்சிகளால் உந்தப்படாமல் அவற்றை அடக்கி நிற்பது அடக்கம் என்ற அரிய பண்பாகின்றது. நம் வாழ்வில் இப்பண்பு ஓர் ஒப்பற்ற செல்வமாகும். இதனால்தான், நிலையில் திரியாது அடங்கி நிற்பவனின் தோற்றம் 'மலையினும் மாணப் பெரிது' என்கின் றனர் சான்றோர். எத்தனை வகைச் செல்வங்களை நாம் பெற்றிருந்தாலும், அடக்கம் என்ற இச்செல்வம் இல்லை யெனில் பயனேதும் இல்லை. "அடக்கத்தைப் போன்ற செல்வம் வேறு இல்லை. எனவே, அதனை உறுதிப் பொரு ளாகக் காத்தல் வேண்டும்" என்கின்றனர் சான்றோர்.

"காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு."

—குறள் - 122.

ஆம். அடக்கம் என்ற பண்பினைப் போல் மதிப்பற்ற செல்வம் நமக்கு வேறு இல்லை. நம் வாழ்வின் வெற்றிக்கு வேண்டிய ஆற்றல்கள் அனைத்தும் அடக்கம் என்ற அடிப் படைப் பண்பிலிருந்தே பிறக்கின்றன.

எவ்வாறு ?

அடக்கி நிறுத்தப்பட்ட நீர்த்தேக்கத்தினைப் பெரிய அணைக்கட்டுகளிலே நாம் காண்கின்றோம். அணையினால் தேங்கி நிற்கும் நீர்ப்பரப்பில் எவ்வளவு அமைதி நிலவுகின்றது! அடங்கி நிற்கும் நீர்ப்பெருக்கு அமைதி பெற்று விளங்குகிறது. ஆனால், அந்த அமைதியிலே அடங்கியுள்ள ஆற்றல்தான் எவ்வளவு? அணைக்கட்டின் மடை ஒன்றைத் திறந்தவுடன், தேங்கி நின்ற நீர் எத்தனை வேகத்தில் இரைச்சலோடு பாய்ந் தோடுகிறது! பாய்ந்தோடிச் செல்லும் அந்நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பெரிய பெரிய சக்கரங்களைச் சுழற்று

கின்றது! இவ்வாறு ஓடும் நீரின் ஆற்றலால் மின்சாரம் உற்பத்தியாகின்றது. இத்தகைய ஆற்றல் நீருக்கு எப்படி வந்தது? அடக்கி நிறுத்தப்பட்ட நீர் வெள்ளப்பெருக்காகத் தேங்கி நின்று இந்த ஆற்றலைப் பெறுகின்றது. நீர்ப் பெருக்கின் அமைதியான தோற்றத்திலே அடங்கியுள்ள ஆற்றல் நமக்குத் தெரிவதில்லை. ஆனால், அடங்கி நிற்கும் அமைதியில்தான் இத்தகைய ஆற்றல் அமைந்துள்ளது.

நாமும் நம் உணர்ச்சிகளை அடக்கி உள்ளத்து அமைதியைப் பெறுகின்றோம். அந்த அமைதியில் அடங்கி நிற்கும் ஆற்றலையும் நாம் அடைகின்றோம்.

நம் அமைதியிலே அமைந்துள்ள ஆற்றல் என்ன?

**எண்ணத்தின் இணையற்ற ஆற்றல் :**

நமது உள்ளத்தில் எத்தனை எத்தனையோ எண்ணங்கள் தோன்றி மறைகின்றன. அந்த எண்ணங்களுக்குள்ள இணையில்லாச் சக்தி நமக்குத் தெரிவதில்லை.

ஒலி, ஒளி, ஊறு, சுவை, நாற்றம் இவையனைத்தும் நம் உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்களுக்கு இல்லை. எனவே, ஐம்பொறிகளுக்கும் புலனாகாது உள்ள எண்ணத்தைப் பற்றி நாம் அக்கறை கொள்ளுவதில்லை.

ஐம்பொறிகளின் உதவியின்றி நம் உள்ளம் இயங்குவதைத் தான் எண்ணம் என்கிறோம். ஐம்பொறிகளுக்கும் அடிப்படையாக இருப்பது உள்ளம். அத்தகைய உள்ளமே இயங்கும் பொழுது அந்த இயக்கத்திற்கு எத்தகைய ஆற்றல் இருத்தல் வேண்டும்?

நாம் சிறிது சிந்தித்தோமானால் ஓர் உண்மை நமக்குப் புலப்படும். நம் கண்களுக்குத் தெரியக்கூடிய பருப்பொருள்களைவிடக் கண்களுக்குத் தெரியாத நுண்பொருள்களுக்குத்தான் ஆற்றல் அதிகமாக உள்ளது என்பதே அந்த உண்மை. மின்சாரம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இன்றைய நம் நாகரிக வாழ்விற்கு இன்றியமையாதது மின்சாரம். வீட்டிற்கு ஒளி கொடுப்பதிலிருந்து பெரிய இயந்திரங்களை இயக்குவது வரை மின்சாரத்தின் உதவியால்தான் நடைபெறுகின்றது. எத்தனை எத்தனையோ வழிகளில் மின்சாரம் பயன்படுத்தப் பெறுகின்றது. அத்தகைய மின்சாரம் நம் கண்களுக்குத் தெரியும் பருப்பொருள் அன்று. மின்சாரத்தின் இயக்கம்

நமக்குத் தெரிகின்றது. ஆனால், மின்சாரத்தை நம்மால் காண முடிவதில்லை. மின்சாரம் நம் கண்களுக்குத் தெரியவில்லை என்பதால் அதற்கு ஆற்றல் ஏதும் இல்லை என்று கூறிவிட முடியுமா? முடியாது. அது போலவே, பருப்பொருளாக இல்லை என்ற காரணத்தால் எண்ணத்திற்கு ஆற்றல் கிடையாது என்று நாம் கொள்ளுவது தவறாகும்.

மனிதனால் நிறுவப்பட்ட பருப்பொருள்கள் அத்தனையும் முதலில் உருவானது அவனது எண்ணத்தில்தான். சிலைகளும் சித்திரங்களும், கோட்டைகளும் கொத்தளங்களும் மனிதனின் அகத்தில் உருவாகிய பின்னரே புறத்திலே வடிவெடுத்துள்ளன. எந்தப் பொருளுக்குமே எண்ணந்தான் மூலமாக அமைகின்றது. கண்ணுக்கு விருந்தாகவுள்ள தாஜ்மகால் அதைக் கட்டியவனின் கருத்திலேதான் முதலில் உருவாகியிருக்க வேண்டும். கலைஞனின் அகத்திலே உருவானதுதான் அவனது கைத்திறனால் சிற்பமாகவும் சித்திரமாகவும் புறத்திலே உருவெடுக்கின்றது.

எனவே, எதுவும் அகத்தில் உருவெடுத்துத்தான், பின்னர், புறத்தில் வடிவெடுக்கின்றது. புறவுருவங்களுக்கு மூலமானவை அகவுருவங்கள். நம் கண்களுக்குப் புலப்படும் புறவுருவங்களுக்குக் காரணமாக இருப்பவை நம் கண்களுக்குப் புலப்படாத அகவுருவங்கள்தாம். இவ்வாறு, அகவுருவின் தோற்றமே புறவுருவமாகிறது. உண்மையாக உள்ளது அகவுருவம்; அதன் தோற்றமாக அமைவது புறவுருவம். புறவுருவங்கள் அழியலாம், ஆனால், அகவுருவங்களுக்கு அழிவு இல்லை.

எனவே, அகவுருவங்களான எண்ணங்களே உண்மையானவை, உறுதியானவை, என்றும் அழிவில்லாது நிலைத்து நிற்பவை. இந்த உண்மையை நாம் உணர்ந்தால்தான் இதயத்தின் இயக்கமான எண்ணத்தின் இணையில்லாத ஆற்றலை நாம் ஓரளவு புரிந்துகொள்ள முடியும்.

இறைமையின் தன்மையையும் இறைமையோடு நாமும் இணைந்துள்ளோம் என்ற உண்மையையும் உணருவதுதான் இறையுணர்வு என்று கண்டோம்.

இறைமையின் தன்மை என்ன ?

இயற்கையின் ஈடில்லா அழகிலே இறைமையை நாம் காணுகின்றோம். இயற்கையின் எல்லையில்லா ஆற்றலிலே இறைமையை நாம் உணர்கின்றோம். இயற்கைக்கும் அப்பாலாகி என்றுமுள்ள

**உண்மையாக** இறைமையை நாம் போற்றுகின்றோம். ஈடில்லா அழகு, எல்லையில்லா ஆற்றல், என்றுமுள்ள உண்மை என்ற பண்புகளையெல்லாம் இறைமையின் தன்மையாக நாம் கொள்ளுகிறோம். அழகு, ஆற்றல், உண்மை இப்பண்புகளுக்கு மூலமான இறைமையோடு நாமும் இணைந்துள்ளோம் என்ற எண்ணமே இறையுணர்வு ஆகின்றது.

ஈடில்லா அழகு, எல்லையில்லா ஆற்றல், என்றுமுள்ள உண்மை — இவ்வாறான இறைமையோடு இணைந்துள்ளோம் என்ற எண்ணம் நம் இதயத்திலே இசையும்பொழுது அப்பண்புகளை நாமும் பெறுகின்றோம். அந்த எண்ணம் திண்ணமுடையதாக இருத்தல் வேண்டும். இறைமையோடு இணைந்துள்ளோம் என்று நாம் திண்ணமாக எண்ணும்போது, அழகு, ஆற்றல், உண்மை போன்ற நற்பண்புகள் நம்மை வந்தடைகின்றன என்பதில் ஐயமில்லை.

நதியிலிருந்து கால்வாய் வெட்டுவார்கள்; குளத்திலிருந்தும் கால்வாய் வெட்டுவதுண்டு. ஆனால், கடலில் இருந்து கால்வாய் வெட்டுவதில்லை. எனினும், இறைமை என்ற கடலுக்குக் கால்வாயாக நம் எண்ணம் அமைகின்றது. எண்ணம் என்ற அக்கால்வாய் வழியாக நமது உள்ளம் என்ற வயலுக்கு இறைமைப் பண்புகள் பாய்கின்றன. பள்ளத்தை நோக்கிப் பாய்ந்து வரும் நீர் போல் நம் உள்ளத்தை நோக்கி ஓடி வருகின்றது, இறைமையின் கருணை வெள்ளம். ஓடி வரும் அருள் வெள்ளத்திற்குக் கால்வாயாக இருப்பது இறைமையோடு நாம் இணைந்துள்ளோம் என்ற எண்ணமேயாகும். இறைமையுடன் இணைந்துள்ளோம் என்ற எண்ணம் இறைமை வெள்ளத்தையும் நம் உள்ளத்தையும் இணைக்கும் கால்வாய் ஆகின்றது. இந்த எண்ணம் இல்லையேல் இறைமை வெள்ளத்திற்கும் நம் உள்ளத்திற்கும் இணைப்பு இன்றிப் போகும். அதன் விளைவாக உள்ளம் உலர்ந்துவிடும், ஒளி அவிந்துவிடும், இருள் பெருகிவிடும். எனவேதான் இறையுணர்வு என்ற எண்ணத்தின் ஆற்றல் அளவிட முடியாததாக உள்ளது.

ஒலியும் ஒளியும் அலைஅலையாகப் பரவுகின்றன என்று விஞ்ஞானம் கூறுகின்றது. இதுபோன்றே நாம் எண்ணும் ஒவ்வோர் எண்ணமும் அலைஅலையாகப் பரவுகின்றது என்பதை உளநூலறிஞர்கள் கூறுகின்றனர். நீண்ட நெடுந்தூரத்திற்கு அப்பால் எழுப்பப்படும் ஒலியலைகள் நம் வீட்டிலுள்ள 'ரேடியோ'வில் கேட்பது போல், நம் எண்ண அலைகளும் எத்தனையோ இதயங்களில் பாய்கின்றன.

உயர்ந்த எண்ணங்களிலேயே தோய்ந்த உள்ளமுடைய சான்றோர் ஒருவர் முன் நாம் இருக்கும்பொழுது நாமும் புனித உணர்வினைப் பெறுகின்றோம். எதனால்? அன்னாரின் புனித எண்ண அலைகள் நம் இதயத்தோடு இசைகின்றன. ஆதலால் நாமும் அதே உணர்வினைப் பெற்றுத் திளைக்கின்றோம். தீயோர் சிலரைக் கண்டதும் நம்மையறியாமலே ஏதோ வெறுப் புணர்வு கொள்கின்றோம். காரணம், தீயோரின் தீயெண்ண அலைகள் நம் இதயத்தைத் தாக்கி வெறுப்புணர்வினைக் கிளப்பு கின்றன. எவருக்கும் எவ்வுயிருக்கும் தீங்கு நினைக்காத நல்ல வர்களைக் கண்டால், விலங்குகள் பறவைகள்கூட அஞ்சாமல் பழகுகின்றன என்று கூறுகின்றனர். மனிதனின் அச்சவுணர் வினைக் காட்டு விலங்குகள் எளிதிலே தெரிந்துகொள்கின்றன என்று வேட்டையாடுவோர் கூறுவதுண்டு. இவ்வாறு, நாம் எண்ணுகின்ற ஒவ்வோர் எண்ணமும், நாம் உணரும் உணர்வு களும் பிறருடைய உள்ளத்தை எட்டுகின்றன, பிற உயிரினங் களைத் தாக்குகின்றன.

**எண்ணியதை எண்ணியாங்கு எய்துகிறோம்:**

இத்தகைய ஆற்றல் படைத்த நம் எண்ணம் இறைமையை நோக்கி இசைந்திடும்போது, எண்ணத்தின் ஆற்றல் எத்தனையோ மடங்கு பெருகுகின்றது. நாம் எதை நோக்கி எண்ணுகின்றோமோ அதனை எய்தும் ஆற்றல் நம் எண்ணத் திற்கு வந்துவிடுகின்றது. நம் எண்ணம் மட்டும் திண்ணமாக இருந்துவிட்டால், நாம் எதையும் எண்ணியாங்கு எய்தி விடலாம்.

*"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணிய ராகப் பெறின்"* (குறள். 666)

நாம் இறைமையோடு இணைந்துள்ளோம் என்று எவ் வளவு திண்ணமாக எண்ணுகின்றோமோ அவ்வளவு ஆற்றலை நாம் எய்துகின்றோம்.

குழி விழுந்த கண்களோடு கூனிக் குறுகி நடந்துகொண் டிருந்தான் ஒருவன். முப்பது வயதே நிரம்பிய அவன் அறுபது வயதடைந்த முதியவரைப் போல் தளர்ந்து காணப்பட்டான். வாழ்க்கையில் குறிக்கோள் ஏதுமின்றி, ஏதோ பிறந்தோம், இறப்பதற்குக் காத்திருக்கிறோம் என்ற நிலையில் அவன் வாழ்ந்து வந்தான். வாழ்ந்துகொண்டு வந்தான் என்று கூறு வதைவிட மாய்ந்துகொண்டு வந்தான் என்று கூறுவதே

பொருந்தும். அவன் இருந்த இரக்கத்திற்குரிய நிலையைப் பார்த்த ஒரு மெய்யறிவாளர் அவன்மீது இரக்கங்கொண்டார். ஏதோ, எங்கோ பார்த்தவாறு கூனிக் குறுகி நடந்து சென்ற அவனை மெய்யறிவாளர் அழைத்து, இறையுணர்வினை விளக்கிப் போதித்தார்.

''தம்பீ நீ யார் தெரியுமா? ஏதோ உனது ஒடுங்கிய உடலில் அடங்கி நிற்கும் உயிர்தான் நீ என்று எண்ணி ஏங்கிக் கிடக்கின்றாய். இந்த உலகம், உலகக் கோளம் நில்லாது சுழலும் பரவெளி, பரவெளியில் பந்துகளாய்ச் சுழன்றுகொண் டிருக்கும் பல்கோடி அண்டங்கள், இவற்றையெல்லாம் படைத்து, ஆட்டிவைக்கும் எல்லாம்வல்ல இறைமை இருக் கின்றதே, அந்த இறைமையோடு உறவு கொண்டவன் நீ, எங்குமாய் விளங்கும் அந்த இறைமை உன் உடலிலும் உள்ளத் திலும் உள்ளது. அளவில்லா ஆற்றலுடைய அந்த இறைமை யோடு இணைந்துள்ள உனக்குக் கவலை ஏன்? துயரம் ஏன்? இறைமையோடு இணைந்துள்ளாய் நீ என்ற உண்மையை இடைவிடாது எண்ணிக்கொண்டே இரு. எல்லாம்வல்ல இறைமையோடு இணைந்துள்ள உன்னால் எதுவும் செய்ய முடியும், எதையும் எய்த முடியும் என்ற எண்ணத்தை இதயத்திலே இடைவிடாது இசைத்துக்கொண்டிரு'' என்ற உண்மையினை அவனுக்குப் போதித்தார். சில நாள்கள் அடிக்கடி அவன் மெய்யறிவாளரைக் கண்டு தன் ஐயங்களைப் போக்கி வந்தான். இது நடந்து மூன்று அல்லது நான்கு மாதங்கள்தாம் இருக்கும். அவனிடம் பெரிய மாறுதல் ஏற்பட்டுவிட்டது!

கூனிக் குறுகி நடந்தவன் நெஞ்சை நிமிர்த்துக்கொண்டு நேர்பார்வையுடன் இப்பொழுது நடக்கிறான்! குழி விழுந் திருந்த அவன் கண்களிலே இப்பொழுது ஓர் ஒளி பிறந்திருக் கிறது! அவனது பேச்சிலே ஓர் உறுதி ஒலிக்கின்றது, வாழ்க் கையைப் புரிந்துகொண்டவனாக அவன் வளமாக வாழ்கின்றான் இப்பொழுது. இஃது உண்மையில் நடந்த நிகழ்ச்சி. மெய்யறிவா ளர்களின் முயற்சியால் இதுபோன்று எத்தனையோ பேர்கள் வாழ்வில் வளம் பெற்றிருக்கலாம்.

இவ்வாறு மாற்றமடைந்தவன் பெற்ற ஏற்றத்திற்குக் காரணம் என்ன? அவனது எண்ணந்தான். ''இறைமையோடு உறவுடையேன்'' என்று அவன் எண்ணத் தொடங்கியதும், அந்த எண்ணம் திண்ணமாக இருந்த நிலையில், உண்மை யிலேயே ஆற்றல் பிறந்துவிட்டது அவன் உள்ளத்தில். தன்னை

யாரென்று கண்டுகொண்டவன், தன் பெருமையை உணர்ந்து கொண்டான். ஐயம் அகன்றது, அச்சம் விலகியது, அயர்வு மறைந்தது. சோர்வினால் சுருண்டு கிடந்த அவன் சுறுசுறுப்பாய் வாழ ஆரம்பித்துவிட்டான். இத்தகைய ஏற்றத்தை அவன் எய்தியது அவனது எண்ணத்தால்தான்.

எண்ணங்களின் பேராற்றலை நன்குணர்ந்த கவிஞர் உறுதியோடு பாடுகின்றார் :

*"எண்ணமிட்டாலே போதும்*
*எண்ணுவதே அவ்வின்பத்*
*தண்ணமுதை யுள்ளே*
*ததும்பப் புரியுமடா!*
*யாதுமாம் ஈசவெள்ளம்*
*என்னுள் நிரம்பியதென்று*
*ஓதுவதே போதும்அதை*
*உள்ளுவதே போதுமடா!"* (பாரதியார்)

இவ்வாறு, இறைமையோடு இணைந்துள்ளோம் என்ற எண்ணத்தால் நாம் எய்தும் அமைதியிலே அடங்கியுள்ள ஆற்றலும் ஏற்றமும் அளவற்றவை.

ஒருவன் கவிஞனாக இருக்கலாம், கலைஞனாக இருக்கலாம். கணக்கெழுதிப் பிழைக்கும் சாமானியனாக இருக்கலாம். வாழ்விலே ஒருவன் எந்த நிலையில் இருந்தாலும், இறையனுபவத்தைப் பெற்றுவிட்டால், அவன் எய்தும் நலன்களுக்கு அளவே இல்லை. அமைதியான உள்ளமும் அளவில்லா ஆற்றலும் அவனது அசையாச் செல்வங்கள் ஆகின்றன.

அமைதியான உள்ளத்தில் பிறக்கும் ஆற்றலால் விளையும் எத்தனையோ பண்புகள் எவ்வாறு நமது வாழ்க்கையை வளம் பெறச் செய்கின்றன என்பது பற்றி இனிக் காண்போம்.

---

## அமைதி

*அமைதியே இயற்கையின் உயிர்; நேர்மை வாழ்வின் உயிர்நிலை. இரண்டும் சேர்ந்ததே உலகின் ஒழுங்கு. அகப் பண்புகள் இந்நேர்மையுடன் ஒத்து நின்றால், உயிர் வளர்ச்சி பெறும். அதனுடன் முரணினால் அழிவு நோக்கிச் சென்று அலமரும். அமைதி, ஒழுங்கு ஆகியவற்றின் முழுநிறை தொகுதியே கடவுள். அதற்கு வழிகாட்டும் நேர்மையே கடவுள் நெறி அல்லது சமயம்.*

—கா. அப்பாத்துரை

*(எண்ணியவண்ணமே, பக். 28)*

# சேனவரையரும் உரையாசிரியரும்

[பேராசிரியர், ஆ. சிவலிங்கனர், மயிலம்]

*உயர்திணை யென்மனர் மக்கட் சுட்டே*
*அஃறிணை யென்மனர் அவரல பிறவே*
*ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே.*

(தொல். சொல். 1)

இந்நூற்பாவில் உள்ள என்மனர் என்ற சொல் பற்றிச் சேனவரையர்,

"என்மனர் என்பது செய்யுள் முடிபு எய்தி நின்றதோர் ஆர்ஈற்று எதிர்கால முற்றுச் சொல். என்றிசினோர் கண்டிசினோர் என்பன முதலாயின அவ்வாறு வந்த இறந்தகால முற்றுச் சொல்"

என்றெழுதினர். இவர் கருத்துப்படி 'என்மனர்' என்பது, என்+மன்+ஆர் எனப் பிரிக்கப்படும். மன் என்னும் இடைச் சொல் எதிர்காலம் காட்டுவதாகும். ஆனல், 'என்றிசினோர்', 'கண்டிசினோர்' என்பவற்றில் 'இசின்' என்ற இடைச்சொல் காலம் காட்டாமல் றகர ஒற்றும் டகர ஒற்றுமே காலம் காட்டின. அதனல் 'இசின்' என்ற இடைச் சொல்போல் 'மன்' என்ற இடைச் சொல் வந்தது என்பது பொருந்தாது. அப்படியாயின் 'ஆர்' என்ற விகுதியிடைச் சொல்லே எதிர் காலம் காட்டியதாகல் வேண்டும். 'இடைச் சொற்களில் சில காலம் காட்டும்; சில காலம் காட்டும் எழுத்துடன் சேர்ந்து வரும்' எனக் கொண்டால், 'மன்' காலம் காட்டியது என்ன லாம். காலம் காட்டும் 'மன்' என்பதற்குக் காலங் காட்டாத 'இசின்' என்ற இடைச் சொல் வந்த 'என்றிசினோர்' என்ற சொல்லைப் பொருத்திக் காட்டுவது பொருந்தாது.

இனி உரையாசிரியர் கூறியதைப் பார்ப்போம்.

"என்மனர் என்பது என்ப என்னும் முற்றுச் சொல்லைக் குறைக்கும்வழிக் குறைத்தல் என்பதனற் பகரம் குறைத்து விரிக்கும்வழி விரித்தல் என்பதனல் மன்னும் ஆரும் என்பன இரண்டிடைச் சொற் பெய்து விரித்தான்"

என்றெழுதினர் அவர். அவரது கொள்கை 'என்ப' என்பது இயற்சொல் என்பதும், அஃது ஆசிரியர் தொல்காப்பியரால் 'என்மனர்' எனத் திரிக்கப்பட்டது என்பதும் ஆகும்.

உரையாசிரியரைத் தெய்வச்சிலையார்,

> "பகரம் குறைக்கின்றது செய்யுளின்பம் வேண்டியன்றே? ஆண்டுக் குறைத்த வழிப் பின்னும் இரண்டெழுத்து விரிக்க வேண்டுமாயின் குறைத்ததனாற் பயனின்மையின் இவ்வாறெழுதும் உரை குற்றம் என்க"

என்று மறுத்தார். இவர் மறுப்பு பொருந்துமா என்பது ஐயமேயாம். குறைப்பதும் விரிப்பதும் செய்யுளின்பம் கருதியாயின் இரண்டுமே செய்வதில் தவறில்லை என்னலாம்.

இனிச் சேனாவரையர் உரையாசிரியரை மறுப்பது காணலாம்.

> "என்மனார் என்பது இடர்ப்பட்டுழிச் சிறுபான்மை வாராது இந்நூலுள்ளும் சான்றோர் செய்யுளுள்ளும் பயின்று வருதலானும், இசை நிறை யென்பது மறுத்துப் பொருள் கூறுகின்றார். பின்னும் இசை நிறை யென்றல் மேற்கோள் மலைவு ஆதலாலும் அவர்க்கது கருத்தன்றென்க"

என்று மறுத்தார் சேனாவரையர். 'என்ப' என்ற சொல்லைத் தொல்காப்பியரே 'என்மனார்' எனத் திரித்து விட்டார் என்பது உரையாசிரியர் கொள்கை. சேனாவரையர், 'என்மனார் என்பது தொல்காப்பியர் திருத்திய சொல்லன்று; அவர்க்கு முன்னோரும் அதனைக் கையாண்டுள்ளனர்; அரிதில் இல்லாமல் பெரிதாகவே வழங்கியுள்ளனர். ஆதலின் உரையாசிரியர் கூற்றுப் பொருந்தாது' என்பதற்காக, "இடர்ப்பட்டுழிச் சிறுபான்மை வாராது இந்நூலுள்ளும் சான்றோர் செய்யுளுள்ளும் பயின்று வருதலானும்" என்றார். இக் கூற்று ஏற்புடையதேயாம். ஆனால், அடுத்துக் கூறிய மறுப்புதான் ஏற்புடையதாகாது.

ஆசிரியர் தொல்காப்பியர் 'மன்' என்ற இடைச் சொல் காட்டும் பொருள்கள் மூன்று என்பார்,

> *"கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்று*
> *அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே"*

(தொல். சொல். 252.)

என்றார். 'மன்' என்ற இடைச் சொல் 'இசை நிறை'ப் பொருளில் வரும் என்று கூறவில்லை. அப்படியிருக்க ஆசிரியரே 'என்மனார்' என்ற சொல்லை உருவாக்கி அதில் 'மன்' என்பது

இசை நிறையாக வந்தது என்று சொல்வாராஞல் அஃது, அவர் கொள்கைக்கே மாறுபட்டதாகும். அதஞல் அவர் 'மேற்கோள் மலேவு' என்ற குற்றம் செய்தவராகின்ருர். 'அப்படி ஆசிரியர் கூருர் ஆதலின் உரையாசிரியர் கொள்கை தவறு' என்று விளக்கவே, "இசைநிறை என்பது மறுத்துப் பொருள் கூறு கின்ருர். பின்னும் இசை நிறை யென்றல் மேற்கோள் மலேவு" என்ருர். இப்படிச் சேனவரையர் கூறுவதன் கருத்து, 'ஆசிரியர் ஒரு சொல்பற்றி ஒரு பொருள் கூறிப் பின்னர் அதற்கு மாருகத் தாமே வேறு பொருளில் அச் சொல்லே ஆளுவது தவறு' என்பதாகும். இது பொருத்தமில்லே.

ஆசிரியர் 'மன்' என்பதுபற்றி இடையியலில் கூறிஞர். பிற கொன், தில் முதலியபற்றியும் கூறிஞர். இடையியல் இறுதியில் புறனடையாக,

*"அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென*
*மெய்பெறக் கிளந்த இயல வாயினும்*
*வினேயொடும் பெயரொடும் நினேயத் தோன்றித்*
*திரிந்து வேறுபடினும் தெரிந்தனர் கொளலே"*

(தொல். சொல். 295)

என்ற நூற்பா அமைத்தார். அதன் உரையில் சேனவரையர், "அதுமற் கொண்கன் தேரே" என்ற தொடரில் 'மன்' என்பது அசைநிலேப் பொருளில் வந்ததாகக் கூறிஞர். ஆசிரியர் 'மன்' என்பது அசைநிலேப் பொருளில் வரும் என்று கூறவில்லே. புறநடையால் சேனவரையர் கொண்டார். அது போலவே புறநடையால் 'மன்' இசை நிறைப் பொருளிலும் வரலாம் என்று கொள்ளலாமே, தவறில்லேயே ?

அன்றியும், ஆசிரியர் 'மன்' என்பதற்குக் கூறிய மூன்று பொருள் மட்டுமன்றித் தாம் கூருத 'நிலேபேறு' என்ற பொருளில் தாமே யாண்டுள்ளார்.

*"முன்னிலே தன்மை யாயீ ரிடத்தொடும்*
*மன்னு தாகும் வியங்கோட் கிளவி"*  (தொ. சொ. 226.)

என்றவிடத்தில் 'மன்ஞது' என்பதற்கு 'நிலேபெருது' என்ற பொருளேக் காணலாம். "வியங்கோட்கிளவி முன்னிலேயும் தன்மையுமாகிய இரண்டிடத்தொடும் நிலேபெருதாம்" என உரை யெழுதிஞர் சேனவரையர்.

*"மன்னுப் பொருளும் அன்ன வியற்றே"*  (தொ. சொ. 34.)

என்ற விடத்தும் அப்பொருள் காணலாம். எனவே 'மன்' என்பதை 'நிலைபேறு' என்ற பொருளில் ஆசிரியரே ஆண்டது 'மேற்கோள் மலைவு' என்னலாமோ? 'மன்னுதாகும்' என வந்ததுகொண்டு "கழிவே ஆக்கம்" என்ற நூற்பாவில் வாராத தாகிய 'நிலைபேறு' என்ற பொருளும் 'மன்' என்பதற்குண்டு என்று கொள்ளலாம். அது போலவே என்மனார் என்பதில் 'மன்' இசைநிறைக்க வந்தது எனக் கொள்வதில் தவறென்ன?

மேலும் ஆசிரியர் 'மன்' என்பது மொழிக்கு முன்னும் பின்னும் வருதலை நோக்கி அம்மூன்று பொருளைக் கூறினார். வினைச் சொல்லின் அகத்துவரும் இடைச்சொல் பற்றி யிடை யியலிற் கூறவில்லை. 'புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதவுநவான இடைச் சொற்கள் பற்றி இடையியலில் கூறவில்லை யெனச் சேனாவரையரே "அவைதாம் முன்னும் பின்னும்" (தொ. சொ. 251.) என்ற நூற்பாவுரையில் கூறியுள்ளார். அதனால் வினைச் சொல்லகத்து வந்த 'மன்' பற்றி மேற்கோள் மலைவுக் குற்றம் ஆசிரியர்க்கு வருமோ என்றஞ்ச வேண்டுவதில்லை.

---

## இலக்கணப் பழமை

*தொல்காப்பியம் என்னும் பழைய தமிழ் இலக்கண நூல் கி. மு. மூன்றும் நூற்றுண்டில் இயற்றப்பட்டது. முன்னோர் சொல்வனவும், பழைய நூல்களில் கூறப்படுவனவும் அவர் அடிக்கடி குறிப்பிடும் குறிப்புக்கள் இருநூற்றைம்பதுக்குமேல் உள்ளன. அவற்றால், அதற்கு முன்பே இலக்கண நூல்களும் இலக்கியங்களும் தமிழில் இருந்தன என்பது அறியப்படுகிறது. அந்த நூலில் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்குவகைச் சொற்களைக் குறிப்பிடுகிறார். இயற்சொல் என்பன அன்றாட வழக்கத்தில் உள்ள சொற்கள்; திரிசொல் என்பன செய்யுளில் மட்டும் வடிவு வேறுபட்டு வழங்கும் சொற்கள். திசைச்சொல் என்பன நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு வகையாக வழங்கும் வட்டார வழக்குச் சொற்கள். வடசொல் என்பன சமஸ்கிருதத்திலிருந்து வந்து தமிழில் வழங்கும் சொற்கள்.*

டாக்டர் மு. வரதராசன்

*(தமிழ் இலக்கிய வரலாறு, பக். 5)*

# 9. உல் என்னும் வேர்ச்சொல்

[ஞா. தேவநேயன்]

**உல்** (வளைதற் கருத்துவேர்) தொடர்ச்சி

*அல்—அலை—அசை.*

அசைதலாவது, இடமும் வலமும் அல்லது மேலுங் கீழும் சாய்தல். சாய்தல் வளைதல் வகைகளுள் ஒன்று; வளைதலின் தொடக்கம் எனினுமாம். பொழுது சாய்தல் என்னும் வழக்கை நோக்குக.

அசைதல்=1. நுடங்குதல். ''அசையியற் குண்டு'' (குறள். 1098). 2. ஆடுதல். (பிங்.). 3. இயங்குதல். ''அவனன்றி யோரணுவு மசையாது'' (தாயு. எங்கு. 1). 4. மெல்லச் செல்லுதல். 5. விட்டுப் போதல். ''அசைந் திடா தொழிகவென'' (ஞானவா. சிகித். 70). 6. நீங்குதல். ''அசையாது நிற்கும் பழி'' (ஆசாரக். 74). 7. ஓய்தல். ''நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி'' (சிறுபாண். 32). 8. கலங்குதல். ''அந்தக னசைந்து நின்ருன்'' (கந்தபு. சிங்க. 310). 9. இளைப்பாறுதல். ''புன்மேய்ந் தசைஇ'' (பு. வெ. 1 : 11). 10. சோம்புதல். ''இலமென் றசைஇ யிருப்பாரை'' (குறள். 1040). 11. தங்குதல். ''கல்லென் சீறூர் எல்லியி னசைஇ'' (அகநா. 63). 12. கிடத்தல். ''குறங்கின் மிசை யசைஇய தொருகை'' (திருமுரு. 109).

**தெ.** அசியாடு.

அசைத்தல் = 1. ஆட்டுதல். ''நந்திபிரான் திருப் பிரம்பை யசைத்தருள'' (காஞ்சிப்பு. மணிகண். 34). 2. அசைத்துக் கட்டுதல். ''புலித்தோலை யரைக்கசைத்து'' (தேவா. 322 : 1). 3. அலகசைத்துத் தின்னுதல். 4. நாவசைத்துச் சொல்லுதல். ''சேடனுயிர நாவினுலு மசைக் கினும்'' (குற்ரு. தல. திருக்குற்ரு. 70). 5. தட்டுதல். ''கதவஞ் சேர்த் தசைத்தகை'' (கலித். 68). 6. வருத்துதல். ''உயங்குநாய் நாவின் நல்லெழி லசைஇ'' (சிறுபாண். 17).

அசை=1. அசைச் சொல். 2. செய்யுளுறுப்பு வகை. 3. தாளக் காலப்பகுதி. ''கொட்டு மசையும்'' (சிலப். 3 : 16, உரை.). 4. விலங்குகள் இரை மெல்கை. 5- சுவடித் தூக்கு.

அசைவு=1. சலனம். 2. தளர்வு. 3. சோம்பு. 4. நிலைமை கெட்டு வருந்தும் வருத்தம். "இளிவே யிழவே யசைவே" (தொல். மெய்ப்பாட். 5), 5. தோல்வி. "அசை வில படை" தேவா. 568 : 6).

அசைவு செய்தல்=உண்ணுதல். "நஞ்சினை யசைவு செய்தவன்" (தேவா. 568 : 6).

அசை—வ. அச்—அசன (உணவு).

அசை—அசங்கு. அசங்குதல்=அசைதல்.

*'சங்கர நான்முகர் கைத்தலம் விண்டசங்க"*

*(கம்பரா. இராவணன் வதை. 28)*

அசங்கு—அசக்கு. அசக்குதல்=அசைத்தல். "அகடசக் கரவின் மணியா" (கந்தபு. கடவுள்வா.).

ஒ. நோ : OE *Scacan*, OS *Skakan*, ON *Skaka*, E. Shate.

அசக்கு—அயக்கு. அயக்குதல்=அசைத்தல். "குன்றுக ளயக்கலின்" (கம்பரா. சேதுப. 10).

அசை — அயை — அயர். அயர்தல் = 1. தளர்தல். "அயலார்போ லயர் வேனோ" (திருவாச. 32 : 9). 2. உணர் வழிதல். அயர்ந்து உறங்குகிறான். (உ. வ.). 3. மயக்க மடைதல். 4. மறத்தல். "ஆயா தறிவயர்ந்து" (பு. வெ. 10, காஞ்சி. 2). 5. அறிவிழத்தல். "ஐம்புல வேடரி னயர்ந்தனை மறந்தென" (சிவஞா. 8). 6. மதி மயங்குதல். "அணைவுறு வைகலி னயர்ந்தனன் மயங்கி" (சிலப். 3 : 173). 7. வழிபடுதல். "பலிசெய் தயரா நிற்கும்" (திருக்கோ. 348). 8. தெய்வமேறி யாடுதல். "சுறவ முண்மருப் பணங்கயர் வனகழிச் சூழல்" (பெரியபு. திருக்குறி. 7). 9. விளையாடுதல். "பிரிவி லாய முரியதொன் றயர" (குறுந். 144). 10. தளரு மளவு வேலை செய்தல். 11. செய்தல். (திவா.).

ம. அயர்(க்க). தெ. அயிலு.

அயர்தி=1. சோர்வு. 2. மறதி. அயர்—அசர்.

அயர்தி—அசர்தி—அசதி.

அசரப் போடுதல்=தளரவிடுதல், காலந்தாழ்த்துதல்.

அயை—அயா=தளர்ச்சி. (திவா.).

அயாவுயிர்த்தல்=(செ. குன்றிய வி.) 1. களைப்பு நீங்கல். 2. வருத்தந் தீர்தல். "அமரர் கற்பம் புக்கயா வுயிர்த்த

தன்றே'' (சீவக. 600). 3. நெட்டுயிர்த்தல். ''அழுதன ளேங்கி யயாவுயிர்த் தெழுதலும்'' (மணி. 21 : 26). (செ. குன்ரு வி.) இளைப்பாற்றுதல். ''எம்மைச் சுமந் தயாவுயிர்த்த வாண்மை'' (சீவக. 2947).

அயா—அயாவு. அயாவுதல்=வருந்துதல். ''மானயா நோக்கியர்'' (சீவக. 1822).

அயை—ஆய். ஆய்தல்=1. அசைதல். ''ஆய்மறியே'' (திருக்கோ. 125, உரை). 2. சோர்தல். 3. வருந்துதல். ''ஐய விடைமடவா யாய'' திணைமாலை. 17). 3. கொண்டா டுதல். ''ஆயு மடுதிலாற்கு'' (பு. வெ. 4 : 16).

ஆய்=வருத்தம். (அக. நி.).

ம., க, து ஆய்.

அல் — ஆல். ஆலுதல் = 1. சுற்றுதல். 2. சுற்றி யாடுதல். ''கரைநின் ருலு மொருமயில் தனக்கு'' (மணி. 4 : 11). 3. களித்தல். (திவ். திருமாலை. 14, வியாக்.) 4. தங்கு தல். (கலித். 36 : 2, உரை). க. ஆல்.

ஆல்—ஆலை=1. சுற்றியாடும் கரும்பாலை. ''ஆலை நீள் கரும் பன்னவன் ருலோ'' (திவ். பெருமாள். 7 : 1). 2. கரும்பு. ''ஆலை யஞ்சிலை வேள்'' (கந்தபு. காமதக. 90 .

ஆலைபாய்தல்=1. ஆலை யாட்டுதல். ''ஆலைபா யோதை'' (சேதுபு. நாட்டு. 93). 2. அலைவுறுதல. 3. மனஞ் சுழலு தல். ''நெஞ்ச மாலைபாய்ந் துள்ள மழிகின்றேன்'' (அருட்பா, விண்ணப்பக்கலி, 406.).

ஆலைமாலை=தொந்தரவு.

ஆல்—ஆலா=வட்டமிட்டுப் பறக்கும் பறவை வகை.

கம் (நீர்)+ஆலை=கம்மாலை—கமலை=கிணற்று நீரிறைக் கும் காளை யேற்றம். முதற் காலத்தில் கமலை சுற்றிவரும் அமைப்பாயிருந்தது. இக்காலத்தும் தொண்டை நாட்டின் தென்பாகத்தில் சுற்றுக் கவலை ஆடுதல் காண்க.

காளை யேற்றத்தைக் கமலை யென்பது பாண்டிநாட்டு வழக்கு; கவலை யென்பது சோழ கொங்கு நாட்டு வழக்கு.

தெ. கபிலெ, க. கபிலெ, கபலி, ம. கப்பி, து. கபி.

கன்னடத்திலும் தெலுங்கிலும் வகரம் பகரமாகத் திரி வதால், அதைத் துணைக் கொண்டு கவலையைக் கபிலை என்று

திரித்து, அதை வடசொல்லாகக் காட்டியுள்ளது சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலி.

'கபிலை' என்பது குரால் (புகர்நிற ஆன்). ஆவைக் கட்டி நீரிறைக்கும் வழக்கம் தமிழகத்தில் இல்லை. கவலை என்னும் தென்சொல்லை வடசொல்லாக்கவே, கபிலை என்னும் வட சொல்லை ஆண்டுள்ளனர் தமிழ்ப்பகைவர். கம் என்பதும் தென் சொல்லே. அம் = நீர். அம் — கம்.

இனி, கருமம் என்பதன் குறுக்கமான கம் என்னுஞ் சொல், முதல் தொழிலான பயிர்த் தொழிலைக் குறித்தது எனினுமாம்.

ஆல்—ஆலத்தி = வழிபாட்டிலும் கண்ணெச்சில் கழித்தலிலும், விளக்கு முத்து சோறு முதலியவற்றைச் சுற்றி யெடுத்தல். "கூத்தும் ஆலத்தியுங் கண்டு" (சீவக. 2468, உரை).

ஆலத்தி யெடுத்தல், ஆலத்தி சுற்றுதல், ஆலத்தி வழித்தல் என்பன உலக வழக்கு.

"மரமதைக் கண்டு மாதர் மரமொடு மரமெடுத்தார்" (தனிப்பா. 2 ஆம் பாகம்). மரமொடு மரம் = ஆலத்தி.

"வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டுங் கையிலே" (ஈடு, 1 : 8 : 9).

முத்தைத் தட்டில் வைத்துச் சுற்றுதல் முத்தாலத்தி. "முத்தாலத்திகொண் டெண்ணுயிர மடவார்சூழ" (தமிழ்நா. 240).

சோற்றுருண்டையைத் தட்டில் வைத்துச் சுற்றுதல் சோற்றாலத்தி (அன்னாலத்தி).

ஆலத்தி—வ. ஆரத்தி.

ஆலத்தி—ஆலாத்தி. "ஆலாத்தி சுழற்ற லென்கோ" (சௌந்தரி. 103).

ஆலத்தி—ஆளத்தி = மெலிவு சமன் வலிவு என்னும் முந்நிலைகளிலும் இசை வட்டமிட்டுப் பாடுதல்.

*"மகரத்தி னொற்றாற் சுருதி விரவும்*
*பகருங் குறினெடிலபா ரித்து - நிகரிலாத்*
*தென்னாத் தெனாவென்று பாடுவரே லாளத்தி*
*மன்னாவிச் சொல்லின் வகை"*

"குன்றாக் குறிலைந்துங் கோடா நெடிலைந்து
நின்றார்ந்த மந்தகரந் தவ்வொடு—நன்றாக
நீளத்தா லேழு நிதானத்தா னின்றியங்க
ஆளத்தி யாமென் றறி"

என்பன அடியார்க்கு நல்லாருரை மேற்கோள் (சிலப். 3 : 26).

ஆளத்தி—வ. ஆலப்தி.

ஆல்—ஆள்—ஆழி=1. வட்டம். (பிங்.). 2. மோதிரம். "ஆழிவாய் விரலில்" (சீவக. 833). 3. கணவனைப் பிரிந்த மனைவி இழைக்குங் கூடற் சுழி. "ஆழியாற் காணுமோ யாம்" (ஐந். ஐம். 43). 4. சக்கரம். (பிங்.). 5. குயவன் சக்கரம். "மட்கலத் தாழியென்ன" (கம்பரா. வாலிவ. 37). 6. சக்கரப் படைக்கலம். "ஆழியெழச் சங்கும் வில்லுமெழ" (திவ். திருவாய். 7 : 4 : 1). 7. கட்டளைச் சக்கரம். "ஆழி வேந்தன்" (கம்பரா. தைல. 70). 8. கட்டளை. "ஆழி நிற்குதி யல்லையேற் பழிவரும்" (உபதேசகா. சிவவிரத. 16).

ஆழிமால்வரை = சக்கரவாளமலை. "ஆழிமால் வரைக் கப்புறம் புகினும்" (புறத். ஆசிரியமாலை).

ஆல்—ஆர்—ஆரம்=1. பறவைக் கழுத்து வட்ட வரி. 2. பதக்கம். (திவா.).

ஆள்—ஆடு. ஆடுதல்=1. அசைதல். "ஆடுகழை" (கலித். 41). 2. உலாவுதல். "இளமழை யாடும்" (ஷை 41). 3. சுற்றுதல். பம்பரம் ஆடுகிறது. 4. சுற்றி வருதல். செக்காடுகிறது. 5. நடஞ்செய்தல். "அம்பலத்தாடுவான்" (பெரியபு. கடவுள்.). 6. கூத்தாடுதல். (பிங்.). 7. நாடகம் நடித்தல் 8. விளையாடுதல். "அகன்மலை யாடி" (மணி. 10 : 55). 9. அலைதல். "ஆடித் திரிந்து நான் கற்றதுங் கேட்டதும்" தாயு. சச்சிதா. 5). 10. சண்டையில் திரிதல். "வருந்தி—ஆடினள் பாடினள்" (ஔவை. தனிப்பாடல்). 11. அளவிற்கு மிஞ்சி அதிகாரஞ் செலுத்துதல். 12. ஒரு துணைவினை. எ - டு: நீராடு, போராடு, சொல்லாடு, மல்லாடு, சேறாடு, நீறாடு.

ம., தெ., க., து. ஆடு.

ஆடு—ஆடகன்=ஆடுவோன் (நடிகன், விளையாடி).

ஆடு—ஆட்டு=1. கூத்து. "பாட்டு மாட்டும் விரைஇ" மதுரைக். 616). 2. விளையாட்டு. "அன்ன வகை யாட்

டயர்ந்து'' (பரிபா. 10 : 97). 3. அசைப்பு. ஓர் ஆட்டு ஆட்டினுன். 4. ஆடுவிப்பு. ம. ஆட்டு.

ஆட்டு—ஆட்டம்=1. அசைவு. 2. உலாவல். ''அஞ்சன மேனியை யாட்டங் காணேன்'' (திவ். திருவாய். 10 : 3 : 3). 3. கூத்தாட்டு. 4. விளையாட்டு. 5. நாடக நடிப்பு. 6. ஒருமுறை நாடகமாடுகை அல்லது விளையாடுகை. ஒரு நாளைக்கு எத்தனை ஆட்டம்? 7. அளவிற்குமிஞ்சி அதிகாரஞ் செலுத்தம். ஆடாத ஆட்டம் ஆடினுன். 8. அலைக்கழிப்பு. என்னை ஆட்டங்காட்டுகிருன். 9. முரண்டு. ஊருக்குப் போக வேண்டுமென்று ஒரே ஆட்டம் ஆடினுன். ம. ஆட்டம். தெ., க., து. ஆட்ட.

ஆட்டு — ஆட்டகம் = நீராட்டுச்சாலை, ''ஆட்டகத்தி லானைந் துகந்தார் போலும்'' (தேவா. 720 : 4).

ஆட்டு—ஆட்டை=ஒருமுறை விளையாட்டு. எ-டு: முதலாட்டை, கடைசியாட்டை.

ஆட்டு—ஆட்டாளி=கருமத்தலைவன். உங்கள் கருமங் களுக்கெல்லாம் நான் ஆட்டாளியா? (உ. வ.).

ஆடு—ஆடி = 1. கூத்தாடி. ''மணிப்பை யரவிஞடி'' (பாரத. அருச்சுனன்றவ. 113) 2. விளையாடி. 3. உருவ நிழலாடுங் கண்ணுடி. ''பொன்னி ஞடியிற் பொருந்துபு நிற்போர்'' (மணி. 19 : 90). 4. பளிங்கு. ''விதிமா ணுடியின் வட்டங் குயின்று'' (மணி. 8 : 47).

கண் + ஆடி = கண்ணுடி. ம. கண்ணுடி.

ஆடு—ஆடை=1. அசையும் மெல்லிய துணி. 2. உடை (பிங்.). 3. ஆடை போற் பரக்கும் காய்ச்சிய பாலேடு. ''ஆடைதனை யொதுக்கிடும்'' (அழகர்கல. 87).

பால் + ஆடை = பாலாடை.

பனை + ஆடை = பனையாடை—பன்னுடை.

பனையரையில் ஆடை போன்றிருப்பதால், நெய்யரி பனை யாடை யெனப்பட்டது.

பன்னுடை=1. பனை தெங்கு முதலியவற்றின் மட்டை யடியில், அலசலான முரட்டுச் சணல் துணிபோல் ஒட்டிக் கொண்டிருக்கும் உறுப்பு. 2. அலசலான முரட்டுத் துணி

வகை (W.). 3. நல்லதைத் தள்ளி அல்லதைக் கொள்ளும் பேதை அல்லது முட்டாள்.

பன்னுடை நெய்யரியாகப் பயன்படுத்தப் பெறுவதாலும், சாற்றைப் போக்கிச் சக்கையைப் பற்றிக் கொள்வதாலும், பயனுள்ளதை விட்டுவிட்டுப் பயனற்ற செய்தியைப் பற்றிக் கொள்ளும் பேதைக்குவமை யாயிற்று.

*"அன்னம் ஆவே மண்ணொடு கிளியே*
*இல்லிக் குடம்ஆ டெருமை நெய்யரி*
*அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்"*

என்பது நன்னூற் பாயிரம் (38).

பனையுறுப்பின் பெயர் தென்னை யுறுப்பிற்கானது ஒப்புமை பற்றி யென்க. ஒ. நோ : எண்ணெய்=எள் நெய், வேறு நெய்.

பல்வகைப்பட்ட வளைதற் கருத்தே இக் கட்டுரை மூலச் சொல்லின் அடிப்படைக் கருத்தென்றும், ஏனையவெல்லாம் அதினின்று தொடர் முறையாய்க் கிளைத்த கிளைக் கருத்துக்க ளென்றும், அறிந்து கொள்க.

ஆரத்தி, ஆலத்தி என்னும் வடமொழித் தென்சொற் றிரிபுகளை, ஆ—ரத்தி, ஆ—லப்தி எனச் சிதைத்து, வெவ்வேறு மூலப் பொருளைக் கட்டிக் கூறுவது உத்திக்கும் உண்மைக்கும் பொருந்தாது.

---

## காடு

*மரங்கள் அடர்ந்த நிலப்பகுதியே பெரும்பாலுங் 'காடு' என வழங்கப்பட்டு வருகின்றது. காடுங் காடுசார்ந்த இடமும் 'முல்லை' யெனப் பெயர் பெறுமென்று தமிழ்நூல்கள் கூறுகிற்கும். பருத்துயர்ந்த மரங்கள் நெருங்கிய காட்டை 'வல்லை' என்றும்; சிறு மரங்கள் மிடைந்த காட்டை 'இறும்பு', 'குறுங்காடு' என்றும்; சிறு தூறுகள் பம்பிய காட்டை 'அரில்', 'அறல்', 'பதுக்கை' என்றும்; மிக முதிர்ந்து முற்றிப்போன மரங்களையுடைய காட்டை 'முதை' என்றும்; மரங்கள் கரிந்துபோன காட்டைப் 'பொச்சை', 'சுரம்', 'பொதி' என்றும்; அரசனது காவலிலுள்ள காட்டைக் 'கணையம்', 'மிளை', 'அரண்' என்றும் பண்டுதொட்டுத் தமிழ் மக்கள் வழங்கிவந்திருக்கின்றனர்.*

—மறைமலையடிகள்

*சிறுவர்க்கான செந்தமிழ், பக். சுசு.*

# திராவிடமொழிகளில் ஏவல் வினை

[திருவாட்டி க. புட்பவல்லி, எம்.ஏ., டிப்ளோமா (தெலுங்கு)

*மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்*]

திராவிட மொழிகளான தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலியவற்றில் உள்ள ஏவல்வினை அமைப்பைப்பற்றி ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கமாகும். வினைகளை அவை உணர்த்தும் பொருளுக்கேற்ப, ஏவல், வியங்கோள், நிபந்தனை, வினை நிலை யுரைத்தல், செயல் எஞ்சு வினை எனப் பிரிக்கலாம். ஏவல் வினை மற்ற வினைகளிலிருந்து மாறுபட்ட அமைப்புக்கொண்டது. ஏவல் வினையில் வாக்கிய வினையடை (sentence adverb) இல்லை. ஏவல் வினையில் காலங் காட்டும் உருபு இல்லை. தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்களுள் இது முன்னிலை இடத்திற்கே உரியது. ஏனெனில் கட்டளைகள், வேண்டுகோள் முதலியன கேட்பவருடன் நேரடியான தொடர்புடையன. செயல் வினை (action verb) மட்டுமே ஏவல் வினையாகப் பயன் பயன்படுத்தப்படுகிறது.

திராவிட மொழிகளில் உள்ள ஏவல் வினை தனி வினையடியாகவோ அல்லது கூட்டு வினையடியாகவோ அமையலாம். தனிவினையடி சான்று தமிழ்: போ 'go' மலையாளம்: போ 'go' தெலுங்கு: வெள்ளு 'go' கன்னடம்: ஹோகு 'go' கூட்டு வினையடி அமைக்க வேண்டுமானால் துணைவினையை இறந்தகால வினையெச்சத்துடன் சேர்க்கவேண்டும். சான்று தமிழ்: புரிந்துகொள் 'understand', மலையாளம்: மனசிலாக்கிக்கொள் 'understand', தெலுங்கு: தெலுசு கொனு 'understand', கன்னடம்: தெலுசி கொள் 'understand'. ஏவல் வினைகளின் அமைப்பு அது வெளிப் படுத்தும் பல்வேறு குண இயல்புகளால் வேறுபடுகின்றது. ஏவல் வினை கட்டளையிடுவதிலும் வேண்டுகோள் விடுப்பதிலும், வழிகாட்டுவதிலும் பயன்படுத்தப்படுகிறது. ஏவல் வாக்கியங்களில் குறைப்பு மாற்றிலக்கண விதியைக் (deletion transformation) கையாளலாம். சான்று:

நீ கதவை மூடு > கதவை மூடு

'you shut the door', 'shut the door'

ஏவல் வினையைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம். **1. ஒருமை ஏவல், 2. பன்மை ஏவல், 3. மரியாதை ஏவல், 4. பணிவு ஏவல், 5. வெறுப்பு ஏவல், 6. எதிர்மறை ஏவல்.**

**ஒருமை ஏவல்** (Singular Imperative)

தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் வினையடியே ஒருமை ஏவலாக அமைகிறது. சான்று தமிழ் : நீ போ 'you go', தெலுங்கு: நுவ்வு வெள்ளு 'you go', கன்னடம்: நினு ஹோகு 'you go'. மலையாளத்தில் வினையடியுடன்(stem) 'ə' என்ற உருபு சேர்த்து ஒருமை ஏவல் அமைக்கப்படுகிறது. சான்று :

நீ வாயிக்க் + உ(ə) > நீ வாயிக்கு (nì vàyikk + ə > nì vàyikkə) 'you read' ஒருமை ஏவல் மிகவும் எளிய அமைப்புடையது. சம நிலையில் உள்ளவர்களுடனும், நெருங்கிய நண்பர்களுடனும், நிலையில் தாழ்ந்தவர்களுடனும் பேசுகையில் இது பயன்படுத்தப்படுகிறது.

**பன்மை ஏவல்** (Plural Imperative)

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் வினையடியுடன் பன்மை உருபு சேர்த்துப் பன்மை ஏவல் அமைக்கப்படுகிறது. பன்மை ஏவலின்போது பயன்படுத்தப்படும் பிரதிப் பெயர்கள் முறையே தமிழில் 'நீங்களும்', மலையாளத்தில் 'நிங்களும்', தெலுங்கில் 'மீரும்' கன்னடத்தில் 'நீவும்' முதலியனவாகும். தமிழில் வினையடியுடன் பன்மை உருபாகிய '(உ)ங்கள்' சேர்த்துப் பன்மை ஏவல் அமைக்கப்படுகிறது. சான்று: நீங்கள் படி + உங்கள் > நீங்கள் படியுங்கள் 'you (p) read'. மலையாளத்தில் வினையடியுடன் பன்மை உருபாகிய 'இன்' சேர்த்துப் பன்மை ஏவல் அமைக்கப்படுகிறது. சான்று நிங்ஙள் நடக்க் + இன் > நிங்ஙள் நடக்கின் ''you (pl): walk' தெலுங்கில் வினையடியுடன் 'அண்டி' என்ற பன்மை உருபு சேர்ந்து பன்மை ஏவல் அமைகிறது. சான்று: வெள்ளு + அண்டி > வெள்ளண்டி 'you (pl go' கன்னடத்தில் வினையடியுடன் 'ரி' என்ற பன்மை உருபைச் சேர்த்துப் பன்மை ஏவல் அமைக்கப்படுகின்றது. சான்று : நீவு மாடு + ரி > நீவு மாடிரி 'you (pl) do'. பன்மை ஏவல் மரியாதையும், பணிவையும்கூடக் காண்பிக்கும்,

**மரியாதை ஏவல்** (Honorific Imperative)

தமிழில் வினையடியுடன் 'உம்' என்ற இடைச் சொல் சேர்த்து மரியாதை ஏவல் அமைக்கப்படுகிறது. சான்று : நீர் வா + உம் > நீர் வாரும் 'you (Hon) come' மரியாதை ஏவலின்போது பயன்படுத்தப்படும் பிரதிப் பெயர் 'நீர்' ஆகும். மலையாளத்தில் வினையடியுடன் உ சேர்த்து மரியாதை ஏவல்

அமைக்கப்படுகிறது. சான்று: நிங்கள் நடக்க் + உ > நீங்ஙள் நடக்கு 'you (Hon) walk' தெலுங்கு கன்னடம் ஆகிய மொழிகளில் பன்மை ஏவலையே மரியாதை ஏவலாகப் பயன்படுத்துகிறார்கள்.

பணிவு ஏவல் (Polite Imperative)

பணிவு ஏவலை அமைக்கப் பல வழிகள் உள்ளன. பணிவு ஏவல் வேண்டுகோள் விடுப்பதற்கும் வழிகாட்டவும், முறைகளைச் சொல்வதற்கும் பயன்படுகிறது. தமிழில் பணிவு ஏவலை அமைக்க 'உம்' என்ற இடைச் சொல்லைச் செயல் எஞ்சுவினையுடன் (infinitive) சேர்க்கவேண்டும். சான்று: நீ செய்ய + உம் > நீ செய்யவும் 'Please you do'. 'ஏன்' என்ற இடைச் சொல்லை வினையடியுடன் சேர்த்தும் பணிவு ஏவலை அமைக்கலாம். சான்று: நீ வா + ஏன் > நீ வாயேன் 'Please you come' மலையாளத்தில் பணிவு ஏவலை அமைக்க வேண்டுமானால் இறந்த காலவினையுடன் 'ஏ' என்ற இடைச் சொல்லைச் சேர்க்க வேண்டும் நீ வன்னு + ஏ > நீ வன்னே (nī vannu + ē > nī vannē) 'Please you come' இறந்த கால வினையுடன் 'ஆலும்' என்ற இடைச்சொல்லைச் சேர்த்தும் பணிவு ஏவலை அமைக்கலாம். சான்று நீ வன்னு + ஆலும் > நீ வன்னாலும் (nī vannu + ālum > nī vannālum) 'Please you come' இறந்தகால வினையுடன் 'உக' என்ற இடைச் சொல்லைச் சேர்த்தும் பணிவு ஏவலை அமைக்கலாம். சான்று : நீ இரிக்க் + உக > நீ இரிக்குக (nī irikk + uka > nī irikkuka) 'Please you sit' தெலுங்கில் பழைய எதிர்கால வினையே பணிவு ஏவலாகப் பயன்படுத்தப் படுகிறது. சான்று: மீரு வெள்துரு 'Pease you go'. மேலும் எதிர்கால வினையில் உள்ள விகுதியை நீட்டித்தும் பணிவு ஏவலை அமைக்கலாம். சான்று வெள்ளவூ (veḷḷavū) 'Please you go' கன்னட மொழியில் பணிவு ஏவல் இல்லையென்றாலும் பன்மை ஏவலே பணிவு ஏவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

வெறுப்பு ஏவல் (Contemptuous Imperative)

தமிழிலும் மலையாளத்திலும் தொலை என்ற துணைவினையை இறந்தகால வினையெச்சத்துடன் சேர்த்து வெறுப்பு ஏவல் அமைக்கப்படுகிறது. சான்று: தமிழ் நீ போய் + தொலை > நீ போய்த் தொலை 'You go' (cont)

மலையாளம் : நீ போய் + தொல > நீ போய்த் தொல (nī pōy + tola > nī pōyt tola) 'you go' (cont). தெலுங்கில்

வெறுப்பு ஏவல் அமைக்க வேண்டுமானால் இறந்த கால வினையெச்சத்துடன் 'ஏடு', 'தகுள்ளோடு' ஆகிய துணைவினைகளைச் சேர்க்க வேண்டும். சான்று : நுவ்வு சதிவி + ஏடு > நுவ்வு சதிவியேடு 'you read' (cont) நுவ்வு சதிவி + தகுள்ளோடு > நுவ்வு சதிவி தகுள்ளோடு 'you read (cont) கன்னடத்தில் இறந்தகால வெச்சத்துடன் 'ஹோகு' என்ற துணை வினையைச் சேர்த்து வெறுப்பு ஏவல் அமைக்கப்படுகிறது. சான்று : நினு பந்து + ஹோகு > நினு பந்து ஹோகு you come (cont)

**எதிர்மறை ஏவல்** (Negative Imperative)

எதிர்மறை ஏவல் ஒருவனது செயலைத் தடுத்துரைக்கிறது. எதிர்மறை ஏவலைக் கீழ்க் கண்டவாறு பிரிக்கலாம். 1. ஒருமை எதிரமறை ஏவல் 2. பன்மை எதிர்மறை ஏவல் 3. பணிவு எதிர்மறை ஏவல்.

**ஒருமை எதிர்மறை ஏவல்**

தமிழில் ஒருமை எதிர்மறை ஏவலை அமைக்க வேண்டுமானால் 'ஆத்' என்ற எதிர்மறை உருபைச் செயல் எஞ்சு வினையுடன் சேர்க்க வேண்டும். சான்று நீ செய்ய + ஆத் ஏ > நீ செய்யாதே ஒருமை எதிர்மறை ஏவலின் விகுதியாக ஏ அமைகிறது. மலையாளத்தில் ஒருமை எதிர்மறை ஏவலை அமைக்க வேண்டுமானால் 'அருது' (arut ) என்ற குறை வினையை வினையடியுடன் சேர்க்க வேண்டும். சான்று. நீ நடக்க்+அருது> நீ நடக்கருது (nī naṭakk+arutə) nī naṭakkarute) 'don't walk'. தெலுங்கில் அகு (aku) எனற பின்னொட்டை வினையடியுடன் சேர்த்து ஒருமை எதிர்மறை ஏவல் அமைக்கலாம். சான்று: நுவ்வு ரா + அகு > நுவ்வு ராகு 'don't come' கன்னடத்தில் செயல் எஞ்சு வினையுடன் பேடா என்ற துணை வினையைச் சேர்த்து ஒருமை ஏவல் அமைக்கப்படுகிறது. சான்று நினு பர + பேடா > நினு பர பேடா (ninu bara + bēḍa > ninu bara bēḍa 'don't come'.

**பன்மை எதிர்மறை ஏவல்**

தமிழில் பன்மை எதிர்மறை ஏவல் ஒருமை எதிர்மறை ஏவலைப் போலவே அமைக்கப்படுகிறது. பன்மை எதிர்மறை ஏவலில் முன்னிலைப் பன்மை விகுதியாகிய 'ஈர்கள்' சேர்க்கப்படுகின்றது. சான்று: நீங்கள் செய்ய + ஆத் + ஈர்கள்> **நீங்கள் செய்யாதீர்கள்.** மலையாளத்தில் பன்மை எதிர்மறை

ஏவல் இல்லை. தெலுங்கில் ஒருமை எதிர்மறை ஏவலுடன் பன்மை உருபாகிய அண்டி சேர்த்துப் பன்மை எதிர்மறை ஏவல் அமைக்கப்படுகிறது. சான்று: மீரு ரா + அகு + அண்டி > மீரு ராகண்டி 'don't come' கன்னட மொழில் பன்மை எதிர்மறை ஏவல் இல்லை.

### பணிவு எதிர்மறை ஏவல்

தமிழில் 'ஏன்' என்ற இடைச் சொல்லை ஒருமை எதிர்மறை ஏவலுடன் சேர்த்துப் பணிவு எதிர்மறை ஏவல் அமைக்கலாம். சான்று: நீ வராதே + ஏன் > நீ வராதே யேன். 'Please don't come' மலையாளத்தில் பணிவு எதிர்மறை ஏவலை அமைக்க வேண்டுமானால் வினையடியுடன் 'அல்லே' என்ற பின்னொட்டு சேர்க்க வேண்டும். சான்று நீ செய் + அல்லே > நீ செய்யல்லே 'Please don't do' தெலுங்கில் பணிவு எதிர்மறை ஏவலை அமைக்க ஒருமை எதிர்மறை ஏவலில் உள்ள கடைசி உயிரெழுத்து நெடிலாகிறது. சான்று: நுவ்வு ராகு > நுவ்வு ராகூ (nuvvu râku>nuvvu rákū) Please don't come' கன்னடத்தில் பணிவு எதிர்மறை ஏவல் இல்லை.

### துணைபுரிந்த நூல்கள் :

1. P. S. Subramanian: *Dravidian Verb Morphology* [*DL , 24*] Annamalainagar. 1971.
2. Dr. M Varadarajan: 'The structure of Imperatives in Tamil' (Paper read in the seminar on Dravidian Linguistics-II Annamalai Nagar, 1969)
3. Jacobs, R A & Rosenbaum, P. S. *English transformational Grammar,* Tokyo, 1968.
4. Lakoff Notes.
5. A. H. Arden: *A Progressive grammar of common Tamil,* [CLS] Madras.

---

### வினைச்சொற்கள்

*வினைச்சொற்களுள், முற்றுவினை, ஏவல்வினை என்பன முடிந்தவினை, முடியாதவினைகளையும், இறந்தகாலவினை, நிகழ்காலவினை, எதிர்காலவினை என்பன எச்சவினை, நுகர்வினை, எதிர்வினை (சஞ்சிதம் பிராரத்தம் ஆகாமியம்) என்பவற்றையும் ஒத்துள்ளன.*

—பாவாணர் 'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்'

# "வரலாற்றில் செய்துள்ள வன்கொடுமை"

[புலவர் இரா. இளங்குமரன்]

செந்தமிழில் தோன்றிய சீரிய நூல் திருக்குறள். இஃது ஆங்கிலம் முதலாய பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்று உலகச் செல்வமாகத் திகழ்வது உலகறிந்த செய்தி. இப் பல்வேறு மொழி பெயர்ப்புக்களில் எல்லாம் நூற்பெயர், 'திருக்குறள்', 'குறள்' என்றும் ஆசிரியர் பெயர், 'திருவள்ளுவர்' 'வள்ளுவர்' என்றுமே குறிக்கப் பெற்றுள. இதுவே முறைமை. ஆனால், ஒரு நூற்றைம்பது யாண்டுகளின் முன்னர்ச் செய்யப் பெற்ற வடமொழி மொழிபெயர்ப்பொன்றில் திருக்குறளின் ஆசிரியர் பெயர் திருவள்ளுவராக இல்லை! அதனை இயற்றியவர் 'வல்லபாசாரியர'ாம்! வல்லபரும் இல்லை; வல்லப ஆசாரியார்!

வள்ளுவர் எவ்வளவு எளிமையாக 'ஆச்சாரியார்' ஆக்கப் பெற்று விட்டார். வரலாற்றில் செய்யப் பெற்றுள்ள வன் கொடுமைகளுக்கு இஃதோர் எடுத்துக் காட்டு!

வல்லபாசாரியரால் செய்யப் பெற்ற வடமொழி நூலின் மொழிபெயர்ப்பே திருக்குறள் என்பதற்கு வடவரா வர வேண்டும்? இங்கேயே 'ஆள்' இல்லாமல் போய் விடுமா? வெறுவாயை மெல்லுபவர்க்கு இவ்வளவு கிடைத்தால் போதாதா? அல்லது தமிழகத்தில் நடக்காத - நடந்துவிடாத நிகழ்ச்சியா? தமிழர் உறக்கம் தெளியும் வரை 'உருட்டிய' மட்டும் ஊதியம் தானே!

இஃதென்ன கதையா? கற்பனையா? கயிறு திரிப்பா? எதுவும் இல்லை. இச் செய்தியைக் குறிப்பவரே 'ஸ்ரீ வல்லபன்' என்னும் பெயரில் இருந்தே திருவள்ளுவர் என்னும் பெயர் உண்டாயிற்று என்று 'அரிதின் ஆராய்ந்து' அறுபது யாண்டு களின் முன் 'செந்தமிழ்' நாட்டில் உலா வர விட்ட அறிஞர் மு. இராகவ ஐயங்கார் அவர்களே. அவர் சொல்லாலேயே அறிவோம்:

"தஞ்சைச் சரசுவதி பண்டாரத்தில் திருக்குறட்கு மொழி பெயர்ப்பாயமைந்த வடமொழி நூலொன்று உள்ளதெனவும், இது நூறு வருஷங்களுக்கு முன்பிருந்த ஸம்ஸ்கிருத பண்டித ரொருவர் இயற்றிய தென்றும் இவர் குறளாசிரியரை வல்லபா சாரியர் என்ற பெயரால் வழங்கியுள்ளாரென்றும் டாக்டர் ஸ்ரீமாந் பி. எஸ். சுப்பிரமண்ணிய சாஸ்திரிகள் என்னிடம் ஒருகால் அறிவித்த செய்தி இங்கே குறிப்பிடத் தக்கது."

செந்தமிழ் தொகுதி. 8. பகுதி. 11 (1909 - 1910)

ஆராய்ச்சித் தொகுதி பக்கம். 209 (1938)

# மறைமலையடிகள் நூல் நிலையத்திற்கு வருகை தந்த மாண்புமிகு அமைச்சர்கள் வழங்கிய பாராட்டுரைகள்

**மு. கண்ணப்பன்,**
*அறநிலையத்துறை அமைச்சர்,*
*தமிழக அரசு* *18—12—72*

மறைமலையடிகள் பெயரால் நூல்நிலையம் அமைத்துத் தமிழ் மொழிக்கு ஊறு நேர்ந்த நேரத்திலெல்லாம் பாதுகாக்கப்பட்ட வரலாற்றையும் தொகுத்து வைத்துள்ளது என்றென்றைக்கும் தமிழ்ச் சமுதாயம் போற்றத்தக்க செயலாகும்.


லாப நோக்கத்தைக் கருதாமல் தமிழ் மொழியின் இலக்கியப் படைப்புக்களையும், வரலாற்றுத் தொகுப்புக்களையும் வெளியிட்டு, அனைவரும் பயன்பெறும் வகையில் நூலகமும் அமைத்து ஆற்றும் பணியானது அன்னைத் தமிழுக்குச் செய்யும் அரும் சேவையாகும்.

இப்பெரும் சேவையைச் செய்யும் இந் நூலகத்துக்கும் பெரியவர் திரு. சுப்பையா பிள்ளை அவர்களுக்கும் தமிழ்ச் சமுதாயம் நன்றிக் கடன்பட்டிருக்கிறது.

**ச. இராமச்சந்திரன்,**
*போக்குவரத்துத்துறை அமைச்சர்,*
*தமிழக அரசு* *27—12—72*

இன்று உயர்திரு மறைமலையடிகள் நூலகத்தைப் பார்வையிடும் பெரும் வாய்ப்பு பெற்றேன். மட்டற்ற மகிழ்ச்சி. தமிழ் மக்களுக்குத் தத்தமக்குரிய வகையில் சிறந்த நற்பணியாற்றிட முடியும் என்பதற்கு இந்நூலகம் சிறந்த ஓர் எடுத்துக் காட்டாகும். இடைவிடா முயற்சியும், உறுதியும், ஊக்கமும் கொண்டு இந்தத் தமிழ்ப்பணி செய்யும் திரு. சுப்பையா பிள்ளை அவர்கட்கும் அவரோடு இயைந்து பணியாற்றும் அருந்தமிழ்த் தொண்டர்கட்கும் தமிழகம் மிகவும் கடப்பாடுடையது. என் நல்வாழ்த்துக்கள்.


# மறைமலையடிகள் நூல் நிலையத்திற்குத் தமிழக அமைச்சர்கள் வருகை



அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பர்



போக்குவரவு அமைச்சர் மாண்புமிகு எஸ். இராமச்சந்திரன்



அமரர் மூதறிஞர் இராஜாஜி

தோற்றம் : 8-12-1878 மறைவு : 25-12-1972

# அமரர் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

மதிநுட்பம் நூலோடுடையராய், உலக மூதறிஞர்களுள் ஒருவராய், ஒழுக்கசீலராய், ஊன்றிய கடவுட் பற்றுளராய், தத்துவ ஞானியாய்த் தம் நிறை வாழ்நாள் முழுவதும் பொதுநல நோக்கமே பொருளாகக் கொண்டு பொன்றாப் புகழை நிலை நிறுத்தி 94ஆம் அகவையில், 25—12—72 திங்கள் மாலை 5-44 மணியளவில் அமரவாழ்வடைந்தார் இராஜாஜி யென்று மக்களால் அன்புடன் அழைக்கப்பெற்ற மூதறிஞர் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார்.

தமிழ் மொழியின் பெருமை உலக அரங்கில் ஒளிவீசித் திகழ்வதற்குத் திருக்குறள் அமைந்ததுபோன்று, மன்பதைத் தொகுதிகளிடையே தமிழர் தம் பெருமை மாண்புற்றொளிர்தற்கு மூதறிஞர் இராஜாஜி அவர்கள் வாய்த்தார் என்று கூறலாம். இப்பெருமகனுடைய வரலாறு இந்திய நாட்டு வரலாற்றில் சிறப்பிடம் பெறுதற்குரிய தொன்றாகும். உலகப் பேரறிஞர்கள் வரிசையிலும் இந்நுண்மாண் நுழைபுல வித்தகர் இடம்பெறத் தக்கவர் என்பதில் ஐயமில்லை. இச்சான்றவர் திறமையால் தமிழகம்பெற்ற நலங்களுள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவற்றுள் முதன்மையானது சென்னை மாநகர் தமிழகத்தின் தனித் தலைநகராக அமையப்பெற்றதே யென்று கூறலாம். ஆந்திர மக்களின் கடுமையான போராட்டத்திற்கிடையே வேறு யாராலும் அவ்வெற்றிபெற்றிருக்க முடியாதென்று அறிஞர் பெருமக்கள் அனைவரும் வியந்து போற்றினர். தமிழ் மக்களின் அறிவு வளர்ச்சிக்காகவும் ஒழுக்க வளர்ச்சிக்காகவும் இவர் பல வகைகளில் தொண்டாற்றியுள்ளார். மதுவிலக்குத் திட்டத்தை முதல் முதல் தமிழகத்தில் நடைமுறைக்குக் கொண்டுவந்ததன் மூலம் உலகம் போற்றும் உயர்நிலை பெற்றார். உலகியல் வாழ்வில் மக்கள் அடைய வேண்டிய உயர் பேறுகள் என்று கருதத்தக்க முதன்மை நிலைகளை இவர் பெற்ற போதும் அவற்றால் விம்மிதமுறாது பற்றற்றநிலையில் கடமைகளை ஆற்றிய காரணத்தால் இவர் வேதகாலத்து அரச ஞானியாகிய சனக மன்னரோடு ஒப்பிடப்பெற்று அரசவிருடி (இராசரிஷி) எனப் போற்றப் பெற்றார். தாய்மொழி பற்றிய இவர்தம் முன்னுளைய கருத்துப் பின்னுளில் வேறுபட்டதொன்றே தமிழ் மக்கள் இவர் பால் சிறுகுறை கொள்ளுவதற்குக் காரணமாயமைந்தது. ஆயினும் நன்றியுணர்வு மிக்கவர்களாகிய தமிழ்மக்கள் இப் பெரியவரால் பெற்ற ஏனைய நலங்கள் குறித்து இவர்பால்

தனியொரு பற்றுதலும் வழிபாட்டுணர்வும் உடையராயினர். தமிழகமக்கள் அனைவரும் எந்நாளும் நினைவுகூர்தற்குரிய சிறப்புடையதாகும் இப்பெருமகனார் வரலாறு.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தொரப்பள்ளி கிராம முனிசீப்பாகவிருந்த நல்லான் சக்கரவர்த்தி ஐயங்கார் என்பாருக்குத் திருமகனாராக இராஜாஜி 1878 திசம்பர்த் திங்களில் தோன்றினார். பிறந்த நாள் திட்டவட்டமாகத் தெரியவில்லை. சில ஆதாரங்களைக் கொண்டு திசம்பர் 8ஆம் நாளென்று கொள்ளப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வியைத் தாம் பிறந்த தொரப்பள்ளி கிராமத்திலும் அதனையடுத்த பேரூராகிய ஒசூரிலும் முடித்த இராஜாஜி கல்லூரிக் கல்வியைப் பெங்களூரில் உள்ள சென்டிரல் கல்லூரியில் பெற்று முற்றுவித்தார். பிறகு சென்னைச் சட்டக் கல்லூரியிற் சேர்ந்து வழக்கறிஞர் பட்டம் பெற்றார்.

வழக்கறிஞர் பட்டம் பெற்ற இராஜாஜி தமது வழக்கறிஞர் தொழிலை நடத்துதற்குச் சேலம் நகரைத் தேர்ந்து கொண்டார். மூத்த வழக்கறிஞர் ஒருவரிடம் சிறிதுகாலம் உதவியாளராகப் பணியாற்றிப் பயிற்சிபெற்ற பிறகே நேர்முகமாக வழக்கறிஞர் தொழிலில் புகுவது பொதுவான வழக்கம். ஆனால், எதிலும் தனித்தன்மை வாய்ந்தவராகிய இராஜாஜி இத்துறையிலும் தம் தனித்தன்மையை நிலைநாட்டுபவராய் எடுத்த எடுப்பிலேயே நேர்முகமாக வழக்கறிஞர் துறையில் புகுந்தார். மேலும் தமது 21 ஆம் அகவையிலேயே கொலை வழக்கொன்றில் ஈடுபட்டுப் பெரும் புகழுக்குரியவரானார். மிக விரைவில் பெரும் பொருள் வருவாய்க்குரியவரானார். அதன் விளைவாக அந்நாள் சேலத்தில் முதன் முதல் உந்துவண்டி (மோட்டார்) உடையவராகும் பெருமையைப் பெற்றார்.

20ஆம் அகவையில் 1898இல் இராஜாஜிக்குத் திருமணம் நிகழ்ந்தது. திருமதி அலமேலுமங்கம்மாள் என்னும் அருங்குண நங்கையார் இராஜாஜிக்கு வாழ்க்கைத் துணைவியராயினர். ஆண் மக்கள் மூவரும் பெண மக்கள் இருவரும் இவர்தம் மங்கல வாழ்க்கையின் நன்கலமாகத் தோனறினர். 1915இல் அருமை மனைவியார் மறைந்தார். அப்பொழுது இராஜாஜிக்கு அகவை முப்பத்தேழு. எனினும், இவர் மறுமணம் பற்றிக் கருதியதாகத் தெரியவில்லை. இராஜாஜியின் பண்பு நலங்களுள் குறிக்கொள்ளத்தக்க தொன்றுகுமிது.

அருமைத் துணைவியார் மறைவுக்குப்பின் இராஜாஜியின் உள்ளம் குடும்ப எல்லையைக் கடந்து விரிந்து பரவலாயிற்று.

பொதுநல ஈடுபாடே அமைதிக்கு வாயிலென உணர்ந்தார். அப் பொதுநலத்தொண்டினை ஆற்றுதற்கு வாய்ப்பாகச் சேலம் நகரமன்றத் தலைவர் பதவியைக் கைப்பற்றினர். இயற்கையிலேயே சீர்திருத்த மனப்பான்மை வாய்க்கப்பெற்ற இராஜாஜி அவர்கள் நகரமன்றத் தலைவர் பதவியின் வாயிலாகப் பல சீர்திருத்தக் கொள்கைகளை எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல் நடைமுறைப்படுத்தினர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை தீண்டத்தகாதவர் என்று அந்நாளில் கருதப்பட்ட அரிசன மக்கள் பார்ப்பனர் குடியிருப்புப் பகுதிகளின் வழியே செல்லு முரிமையும் பொதுநீர்க் குழாய்களைப் பயன்படுத்துமுரிமையு மாகும். இச் செயல் காந்தியடிகள் அரிசன முன்னேற்ற இயக்கம் தொடங்குவதற்குமுன்பே இராஜாஜி அவர்களால் நிகழ்த்தப்பட்டமை தனிச் சிறப்புக்குரியதாகும். அக்காலம் காந்தியடிகள் தென்னப்பிரிக்காவில் இந்திய மக்கள் குடியுரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். அப்போராட்ட இயக்கத்திற்கு உதவியாக இராஜாஜி அவர்கள் நன்கொடை மூலம் பொருள்பெற்றுக் காந்தியடிகளுக்கு உதவினர்.

1917இல் இராஜாஜி அவர்கள் சென்னை நகரில் குடியேறினர். அவ்வாண்டில் காந்தியடிகள் சென்னை வந்து இந்து நாளிதழாசிரியராகிய அமரர் கத்தூரிரங்க ஐயங்கார் அவர்கள் வீட்டில் தங்கினர். அப்பொழுதுதான் இராஜாஜியும் காந்தியடிகளும் முதன் முதல் ஒருவரையொருவர் நேரில் கண்டனர். அம் முதற் காட்சியிலேயே இருவரும் உணர் வொற்றுமை காரணமாக நன்கு பிணைப்புண்டனர். அப் பிணைப்புப் பின்னர் மேலும் மேலும் இறுகி இராஜாஜி மகள் இலக்குமியும் காந்தியடிகள் மகன் தேவதாசும் திருமணம் மேற்கொள்ளும் நிலையில் குடும்பத் தொடர்பாக மலர்ச்சியுற்றது.

காந்தியடிகளைக் கண்ட நாள்முதல் இராஜாஜி அவர்கள் பொதுவாழ்வில் மேலும் மிகுதியாக ஈடுபட்டு உழைக்கலானர். 1920 இல் அடியோடு தொழிலைவிட்டுத் தொண்டாற்றிச் சிறை புகுந்தார். 1921இல் காங்கிரசின் பொதுச் செயலாளரானர். 1922 முதல் 1942 வரை காங்கிரசுச் செயற்குழுவின் உறுப்பினராயமைந்து தொண்டு புரிந்தார். 1942இல் கருத்து வேற்றுமை காரணமாகக் காங்கிரசுக் கட்சியிலிருந்து விடுபட்டிருந்தார். மீண்டும் 1946இல் காங்கிரசில் சேர்ந்தார். 1946-47இல் காரியக்கமிட்டி உறுப்பினரானர்.

1921இல் காங்கிரசு சட்டமன்றத்தில் புகவேண்டுமென்று எடுத்த முடிவை எதிர்த்துச் சில ஆண்டுகள் அரசியலிலிருந்து

விலகித் திருச்செங்கோட்டில் ஆசிரமம் ஒன்றமைத்துக் கொண்டு ஆக்கப்பணிகள் பலவற்றை ஆற்றிவந்தார்.

1930இல் காந்தியடிகள் உப்புச்சட்ட எதிர்ப்பு இயக்கம் நடத்தியபோது இராஜாஜி அவர்கள் திருச்சியிலிருந்து வேதாரணியத்திற்குக் கால்நடையாகப் புனிதச் செலவு மேற் கொண்ட குழுவிற்குத் தலைமை தாங்கிச் சென்றார். அங்குக் காவலரால் சிறைப்பிடிக்கப் பெற்றுத் தண்டனை ஏற்றார்.

1937இல் சென்னையில் நிறுவப்பட்ட முதல் காங்கிரசு அமைச்சரவையில் இராஜாஜி முதல்வராகப் பொறுப்பேற்றுத் தமது ஒப்பற்ற ஆட்சித்திறனை வெளிப்படுத்தினார்.

1942இல் கருத்து வேறுபாட்டால் காங்கிரசை விட்டு விலகிய இராஜாஜி அவர்கள் மீட்டும் 1946இல் காங்கிரசில் சேர்ந்து நடுவணரசின் இடைக்கால அமைச்சரவையில் இடம் பெற்றுப் பணியாற்றினார்.

1947 ஆகஃச்டு 15ஆம் நாள் இந்திய நாடு விடுதலை பெற்றது. அதையொட்டி யெழுந்த வகுப்புக் கலவரத்தின் விளைவாக மேற்கு வங்கம் மிகவும் குழப்பநிலைக்குள்ளாயிற்று. அந்நிலையில் இராஜாஜி அவர்கள் மேற்குவங்க ஆளுநர் பதவியை ஏற்று வகுப்பு ஒற்றுமை நேர்தற்கு வழி செய்தார். அதன் பின்னர் 1948இல் ஆளுநர்களின் தலைவர் (கவர்னர் ஜெனரல்) பதவியை யேற்று இந்தியா குடியரசு நிலையை எய்திய 1950 வரை அப்பதவிக்குப் பெருமையுண்டாகும் வகையில் விளங்கினார்.

1950இல் குடியரசுத் திட்டம் நடைமுறைக்கு வரலாயிற்று. குடியரசுத் தலைவராகத் திரு. இராசேந்திரபாபு அவர்கள் அமர்த் தப்பெற்றார்கள். இராஜாஜி அவர்கள் நடுவணரசின் உள்துறை அமைச்சராகச் சிறிது காலம் பணியாற்றிவிட்டுச் சென்னை திரும்பினார். அதுமுதல் சென்னையிலேயே நிலையாகத் தங்கி இலக்கியத் துறைக்குப் பெரும்பணி இயற்றத் தொடங்கினார். 'சக்கரவர்த்தித் திருமகன்' 'வியாசர் விருந்து' என்னும் இரு பெரு நூல்களை வெளியிட்டுப் பெரும் புகழ் பெற்றார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சிறப்பெய் தினார். அல்லாமலும் கதையென்றும் கட்டுரையென்றும் பற்பல சிறு சிறு நூல்களின் மூலமும் அரிய இலக்கியத் தொண்டு புரிவாராயினர்.

1952 பொதுத் தேர்தலில் சென்னை மாநிலத்தில் எந்தக் கட்சியும் பெரும்பான்மைபெற வியலாமற் போயிற்று. ஆகவே, அமைச்சரவை நிறுவுவதில் இடர்ப்பாடுண்டாயிற்று.

அந்நிலையில் ஆளுநர் அவர்கள் இராஜாஜி அவர்களை மேலவை உறுப்பினராக அமர்த்தி அதன் மூலம் முதல்வர் பொறுப்பேற்று அமைச்சரவை யமைக்குமாறு வேண்டிக் கொண்டார். அவ்வாறே இரண்டாண்டுகள் திறம்பட அமைச்சரவையை நடத்திப் பிறகு கருத்துவேற்றுமை காரணமாக ஆட்சியை விடுத்து அமைதி நிலைக்குச் சென்றார். இவ்வாட்சிக் காலத்தில்தான் தமிழக மக்களின் பெருநன்றிக்குரியதான சென்னை நகரத்தைத் தமிழ் மக்களின் தலைநகரமாக்கும் அரிய செயல் இராஜாஜி அவர்களால் நிறைவேற்றப்பட்டது.

1959இல் சுதந்திராக் கட்சி என்னும் ஒரு கட்சியைத் தொடங்கிக் காங்கிரசுக் கட்சிக் கெதிராக 'ஒழுங்கான எதிர்ப்பு' என்பதை உயிர்க் கொள்கையாகக் கொண்டு அதனை நடத்தி வந்தார். 'சுயராச்சியா' என்னும் ஆங்கிலக் கிழமை இதழிலும் 'கல்கி' என்னும் தமிழ்க் கிழமை இதழிலும் அரசியல் பற்றிய தங் கருத்துக்களைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தார்.

1967 பொதுத் தேர்தலில் இராஜாஜி அவர்கள் தி. மு. க வுடன் உறவு கொண்டு அதனைப் பாராட்டிப் போற்றியது கண்டு உலகமே வியந்தது.

தமது 83ஆவது அகவையில் அதுவரை வெளிநாடு சென்றிராத இராஜாஜி அமெரிக்க நாட்டிற்குச் சென்று தலைவர் திரு. கென்னடியைக் கண்டு அணுக்குண்டு தடைபற்றி வேண்டுகோள் விடுத்துத் திரும்பினார். அச்செயல் அவர்தம் மக்கட் பற்றினைத் தெற்றென உலகுக்குப் புலப்படுத்தியது.

எளிய பழக்க வழக்கங்களையும் கடுமையான நியதிகளையும் மேற்கொண்டு வாழ்க்கை நடத்திய காரணத்தால் கொடிய மூச்சிழுப்பு (ஆஸ்த்துமா) நோய்க்கு ஆளானவராயிருந்தும் 94 அகவைவரையில் இவ்வுலகிடை இராஜாஜி அவர்களால் வாழ முடிந்தது. மற்றும் அவர் வாழ்நாள் நீள்வுக்கு அவர்தம் ஓயா உழைப்பும் ஒரு பெருங்காரணமாமென்பது அறிஞர்தம் கருத்தாகும்.

17—12—72 அன்று இராஜாஜி அவர்கள் உடல் நலக் குறைவு (சிறுநீர் செந்நீரில் கலக்கும்—யூரியா என்னும் நோய்) காரணமாகச் சென்னைப் பொது மருத்துவ மனையில் சேர்க்கப் பெற்றார். மருத்துவர் பலர் கண்ணுங்கருத்துமாக நோய் தீர்க்கும் முறைகளை மேற்கொண்டனர். நிலைமை சீராவது போலத் தோன்றியது. மீட்டும் நிலைமாறி முடிவில் 25—12—72 திங்கட் கிழமை மாலை 5-44 மணியளவில் இவ்வுலகவாழ்வை நீத்து இறையடி சேரலானார்.

———

# இராஜாஜி பற்றிய கருத்துரைகள்

[மூதறிஞர் இராஜாஜியின் மறைவினையொட்டிப் பெருமக்கள் பலர் வெளியிட்டுள்ள இரங்கற் செய்திகளினின்று திரட்டப் பட்டுள்ள சில இன்றியமையாக் கருத்துரைகள் மட்டுமே ஈண்டுத் தரப்பட்டுள்ளன.]

நாட்டு வாழ்வில் பலவித பதவிகளில் அமர்ந்து கண்ணியத்துடனும் திறமையுடனும் பணியாற்றியவர் இராஜாஜி. சிறந்த அரசியல் தலைவர், நாட்டுப் பற்றுளர்; தளராத வயதிலும் உள்நாட்டு அரசியலுக்கும் அனைத்து நாட்டு அரசியலுக்கும் தெளிவான கருத்துரைகளை வழங்கியவர். பயன் கருதாமல் தம் கருத்துக்களைத் துணிவுடன் எடுத்துரைத்தவர்

**—இந்தியக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி.**

ஆட்சித் திறனும் ஆழ்ந்த நுண்ணறிவும், எதிர்ப்புக் கஞ்சாது தமக்குச் சரியெனப் பட்டதைத் துணிடவுன் கூறும் இயல்பும் பெற்றிருந்தார் இராஜாஜி.

**—இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி.**

இராஜாஜியின் மறைவினால் நிலைபெற்றிரியா அரசியல் சிந்தனையாளர் ஒருவரை உலகமும் பழுத்த அரசியல் சூழ்ச்சியாளர் ஒருவரை இந்தியாவும் இழந்துவிட்டன.

**—வங்க தேசத் தலைவர் அபுசையத் சௌத்திரி.**

இராஜாஜியின் மறைவினால் இந்தியாவும் உலகமும் மாபெரும் மெய்யறிவாளரும், அரசியல் சூழ்ச்சியாளருமான ஒருவரை இழந்துவிட்டன.

**—அமெரிக்கக் குடியரசுத் தலைவர் நிக்சன்.**

அரசியல் நுண்ணறிவும், பெருந்தன்மையும், பிறருடைய சிந்தனைகளை ஊடுருவி ஆராயும் அறிவாற்றலும் உடையவர் இராஜாஜி. அவருக்கு ஈடு காண்பது அரிது.

**—தமிழக ஆளுநர் கே. கே. ஷா.**

இராஜாஜி இல்லாதிருந்தால் மகாத்மா காந்தியே இருந்திருக்க மாட்டார்; காங்கிரசே இருந்திருக்காது. சமுதாயத் துறையில் மாபெரும் சீர்திருத்தம் செய்த பெருமை இராஜாஜிக்குத்தான் உண்டு. தமிழ்நாட்டில் ஒப்பிலாத மணியாய் வாழ்ந்து அரும் பெரும் செயல்களைச் செய்தவர் இராஜாஜி.

**—பெரியார் ஈ. வே. ரா.**

காந்திஜிக்கு அடுத்தபடியாக பெருமதிப்பு வாய்ந்த நாட்டுத் தலைவர் இராஜாஜி. தமது வாழ்க்கையில் அனைத்துலக அரசியல் சிக்கல்களில் துணிந்த—அச்சமற்ற கொளகையைக் கடைப்பிடித்தவர். மனச்சான்றின காப்பாளர் எனக் காந்தியடிகளினாலேயே புகழ்ந்துரைக்கப் பெற்றவர்; அற வாழ்க்கையில் பெரிதும் நம்பிக்கையுடையவர். பொது வாழ்வில் ஈடுபடுபவர்களிடம் உயரிய கண்ணியத்தை எதிர்பார்த்தார்.

**—தலைவர் காமராஜர்.**

*ஒளிவிளக்கு சாய்ந்தது. இராஜாஜியின் நினைவு என்றும் எங்கள் இதயத்தில் நிலைத்திருக்கும்.*

**—தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி.**

*மதிநுட்பம் வாய்ந்த அரசியல்வாதியான இராஜாஜியின் கருத்துக்களை அடிக்கடி காந்திஜியே கோரியிருக்கிறார். தமிழ் நாட்டையும் தமிழ் மொழியையும் இராஜாஜி பெரிதும் விரும்பி வாழ்ந்தார். பல்வேறு நாட்டுப் பெரிய மனிதர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். ஒரு தலைசிறந்த இதழாசிரியராகவும் விளங்கினார்.*

**—முன்னாள் முதலமைச்சர் எம். பக்தவத்சலம்.**

*இராஜாஜி இல்லாத தமிழகத்தையோ இந்தியாவையோ கற்பனையிலும் காண்பது அரிது.*

**—முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர்**
**டாக்டர் இராதாகிருட்டிணன்.**

*தம்முடைய ஒரு நூற்றாண்டுக்கால வரலாற்றை இந்த நாட்டின் பொதுச் சொத்தாக்கிவிட்டு மறைந்து விட்டார் இராஜாஜி.*

**—சிலம்புச் செல்வர், ம. பொ. சி.**

*கொள்கைப் பிடிப்பும் மன உறுதியும் மக்களாட்சியில் ஆழ்ந்த நம்பிக்கையும் கொண்டிருந்தவர் இராஜாஜி.*

**—ஆசாரிய கிருபளானி.**

*இப்படிப்பட்ட மனிதர்களைக் காண்பது அரிது.*

**—மொரார்ஜி தேசாய்.**

*இராஜாஜி கடந்த காலத்தின் அடிப்படை; நிகழ்காலத்தின் உருவம்; வருங்காலத்தை உரைக்கும் எதிர்நோக்காளர்.*

**—முக்கையா தேவர்.**

*முஸ்லீம் மக்களிடம் இராஜாஜி மிகுந்த அன்பு கொண்டிருந்தார்.*

**—அப்துல் வகாப், முஸ்லீம் கட்சித் தலைவர்.**

*இருளைப் போக்க எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்தி அணைந்து விட்டது. மீண்டும் இருள் சூழ்ந்து விட்டது.*

**—எம். ஆர். மசானி.(சுதந்திராக் கட்சி.)**

*இராஜாஜி அவர்களை நினைத்து நாம் நடத்தப் போகும் அரசியல் நேர்மை, நாட்டுக் கடமை உணர்வு ஆகியவற்றுக்கு அவருடைய பொன் மொழிகளைக் கட்டிக் காப்போம்.*

**—சிவாஜி கணேசன்.**

*இராஜாஜி வாழ்ந்தபோது இலட்சியத்திற்காக வாழ்ந்தார். இப்போது அவரே இலட்சியமாகிவிட்டார்.*

**—எம். ஜி. இராமச்சந்திரன்**

# இராஜாஜி

[மீ. ப. சோமு]

கண்ணீர் இன்னும் உலரவில்லை கட்டுரை எப்படி எழுதுவது ?

கண்ணீர் விடக்கூடாது என்று எப்போதும் சொல்லி வந்தவரை எண்ணியே கண்ணீர் விடுவதா ? கூடாதுதான். ஆனால் மனம் கேட்கிறதா ? இல்லையே !



அவரைப் பற்றி எழுத வேண்டும், நிறைய எழுத வேண்டும். அவருடைய கடிதங்கள், அவர் என் வீட்டிற்கு வந்த வேளைகளில் எல்லாம் என்னுடைய ஒலிப்பதிவுக் கருவியில் வீட்டில் உட்கார்ந்து பேசிக்கொண்டே செய்துள்ள சிறிய பெரிய ஒலிப்பதிவுகள், கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளில் அவரோடு எனக்குத் தொடர்புள்ள பற்பல நிகழ்ச்சிகள்,— ஆகிய எல்லாவற்றையும் தொகுத்துச் சொல்லலாம். செந்தமிழ்ச் செல்விக்கு என்றே சில பல தனிச் செய்திகளும் உண்டு. சைவ சித்தாந்தத்திலும், திருநெல்வேலிப் பண்பாட்டிலும், கழகப் பதிப்புகளிலும், மறைமலை அடிகள் நூல் நிலையத்திலும் ராஜாஜி காட்டிய ஆர்வம் என்ன என்பதையும், சொல்லிய கருத்துக்கள் என்ன என்பதையும் கூறினால் நண்பர் திரு. சுப்பையாப் பிள்ளை அவர்களுக்கு மிகவும் உகப்பாக இருக்கும். இவற்றை எழுதவேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு. ஆனால் துயரம் இன்னும் பசுமையாக இருக்கிறது !

கண்ணீர் உலரட்டும். பிறகு கட்டுரைகளைப் பற்றிச் சிந்திப்போம்.

ராஜாஜியின் நினைவுக்கு அஞ்சலி செலுத்துவதே இப்போது நமது கடமை !

# மூதறிஞர் இராஜாஜியும் கழகமும்

1939ஆம் ஆண்டில் மதிப்புமிகு இராஜாஜி சென்னை மாநில முதலமைச்சராக விருந்தனர். அவர்தம் அன்பிற்குகந்த இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் அறநிலைய ஆணையராகத் தியாகராய நகரில் குடியிருந்தனர். கழகத் தலைவர் வழக்குரைஞர் ப. சிதம்பரம் பிள்ளை, திவான்பகதூர் பி. ஆவுடையப்ப பிள்ளை, கழகச் செயலரும் என் அருமைத் தமையனருமான திருவரங்கனார் ஆகிய மூவரும் திரு முதலியார் வீட்டிற்குச் சென்றிருந்தனர். அப்போது இராஜாஜி அங்கே வந்தனர். அவரிடம் திரு முதலியார் என் தமையனாரை அறிமுகப்படுத்தினர். உடனே அவர் "இந்திய மொழிகளில் வெளிவந்துள்ள நூல்களை யெல்லாம் பார்க்கும் வாய்ப்பு எனக்கு உண்டு அல்லவா? கழகம் தமிழ் நூல்களை அச்சிட்டு உயர்ந்த கட்டடஞ் செய்து அழகாய் வெளியிடுவது போல இந்திய மொழிகள் எதிலும் எவரும் தம் நூல்களை வெளியிட வில்லை" என்று கூறிக் கழகத்தின் பணியினைப் பாராட்டித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் 'மலரும் மாலையும்' என்ற நூலில் 10 படிகளை உயர்ந்த கட்டடஞ் செய்து தருமாறு திரு முதலியார் அனுப்பிவைத்தனர். அவற்றைக் கண்கவர் வனப்பினவாய் ரெக்சைன் கட்டடஞ் செய்து அனுப்பி வைத்தேன். இராஜாஜி, கல்கி, இரசிகமணி முதலியோர் ஆளுக்கொரு படியினைப் பெற்றுக்கொண்டு பாராட்டினர்.

அவர் ஆளுநர்தலைவ (கவர்னர் ஜெனரல்)ராக விருந்தபோது தியாகராய நகரிலுள்ள அவர்தம் இல்லத்திலே யானும் கழகத் தலைவர் திரு மு. காசிவிசுவநாதன் செட்டியாரும் அவரைக் கண்டு வணங்கி உயர்ந்த கட்டடஞ் செய்யப்பெற்ற **சிலப்பதிகார மூலத்தை** அன்பளிப்பாக வழங்கினோம். அப்போதும்கழகப் பதிப்பு முறையினைப் பாராட்டினர். அன்பர் திரு மீ. ப. சோமுவிடம் கழகத் தொண்டைப் பற்றிப் பலமுறை சிறந்தெடுத்துப் பேசியதுண்டு.

**வ. சு.**

# சிந்தனையின் இமயம்

[கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம்]

நானிலத்தின் அரசியல்மா வீர ஞானி
இராஜாஜி மறைந்தாரே! நல்வாழ் வென்னும்
மானிடரின் தேர்வினிலே தொண்ணூற் றைந்து
மதிப்பெண்கள் வாங்கிமுதற் பரிசு கொண்ட
மேனியினைத் துறந்தாரே! மேதை பெற்ற
மெய்க்கீர்த்தி தனைநிறுத்தி விடைபெற் றாரே!
தேன்இனிய தமிழகத்தின் திறமைக் கெல்லாம்
சின்னமெனத் திகழ்ந்தவரை இழந்திட் டோமே!


எண்ணரிய சிந்தனையின் இமயம் போன்ற
இராஜாஜி யவர்மூளை கருத்துப் பேழை!
எண்ணியதைக் கதைச்சுவைபோல் இதயம் ஈர்க்கும்
எழுத்தினிலும் பேச்சினிலும் இலங்கச் செய்தார்;
பண்புநெறிக் காவலராய் நாடு போற்றும்
"பாரதரத் தின" ஒளியைப் பரப்பி வென்றார்;
மண்ணுலக வரலாற்றில் பொன்ஏ டாக
வாழ்கின்றார்! மாமேதை மாண்பு வாழ்க!

சிறுகிராம முன்சீஃபின் மகனாய்த் தோன்றித்
தேயத்தின் பெருங்'கவர்னர் ஜெனரல்' என்னும்
ஒருசிகரப் புகழ்நிலையின் உயர்வு கண்டார்
உவமையிலா இராஜாஜி உவமை பொங்கும்
குறுநகையின் சுவை குலுங்கும் இலக்கி யங்கள்
குவித்தமைக்குக் கை குவிப்போம்! பேறு ஞானக்
கருவூலம் அவர்மாண்பை எந்த நாளும்
கருத்தினிலே இருத்திமிகப் போற்று வோமே!

# பண்டித, வித்துவான்
# ரா. நடேச நாயகர் மறைவு

[பேராசிரியர். அ. கி. பரந்தாமனார்]

சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் துணைத் தமிழ்ப் பேராசிரியரும் தமிழகப் புலவர் குழுவின் உறுப்பினருமாகிய பண்டித, வித்துவான் ரா. நடேச நாயகர் பரிதாபி ஆண்டு கார்த்திகைத் திங்கள் 27ஆம் நாளுக்குச் சரியான 1972ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 4-15 மணியளவில் காலமானார். இவர் தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், இலக்கணக் கொத்து, தொன்னூல் ஆகிய இலக்கண நூல்களை நன்கு பயின்று தமிழிலக்கணத்தில் சிறந்து விளங்கியவர்; ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான



சிந்தாமணியிலும் தனிப்பற்று மிகுந்து அதனை நன்கு பயின்றவர்; கவிதை இயற்றுவதிலும் வல்லவர்; சைவசித்தாந்த சாத்திரத்திலும் பயிற்சி மிக்கவர்.

**வரலாறு :**

நாயகர், சென்னைச் சூளையைச் சேர்ந்ததும் சண்டமாருத சமயக் கோளரி சோமசுந்தர நாயகர் வசித்து வந்ததுமாகிய அவதானம் பாப்பையர் வீதியிலுள்ள ஒரு வீட்டில் 24-9-1900 இல் பிறந்தார். இவர் தந்தையார் இராசு நாயகர்; தாயார் பூங்காவனம் அம்மையார். தங்கள் வீட்டிற்கு எதிரில் இருக்கும் நடராசர் கோயில் முதல் குடமுழுக்கு விழா நடந்த அன்று பிறந்ததால் பெற்றோர்கள் வைணவர்களாயிருந்தும் வேறுபாடு கருதாது இவருக்கு நடேசன் என்று பெயர் இட்டார்கள். இவர் வளர்ந்து சிறிது பயின்று சென்னைக் கர்னாட்டிக் பக்கிங்காம் பஞ்சாலையில் தச்சுத் தொழிலாளியாய் வேலை செய்து வந்தார். கல்வியில் ஆர்வம் மிகுந்து, புரசை வைக்கோற்காரன் தெருவில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில் திரு. மாசிலாமணி முதலியாரால் நடத்தப்பட்டு வந்த இரவுப் பள்ளியில்

சேர்ந்து, ஆங்கிலமுறைக் கல்வி பயின்றார்; உரையாசிரியரான காலஞ்சென்ற கன்னைய நாயுடுவினிடமும் பின்பு கு. மதுரை முதலியாரிடமும் தமிழ் பயின்றார்.

1931 ஆம் ஆண்டு வித்துவான் தேர்வு எழுதித் தேறினார். அந்த ஆண்டு சூன் திங்களில் சென்னை வேப்பேரியில் புகழ் பெற்று விளங்கும் திருப் பவுல் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய் அமர்ந்து பணியாற்றினார்; அக்காலத்தில் வைக்கோற்காரன் வீதிப் பள்ளியில் பேராசிரியர் ச. த. சற்குணர் நடத்தி வந்த இலக்கிய வகுப்பில் சேர்ந்து ஏறக்குறைய 7 ஆண்டுகள் பயின்றார்; மதுரைத் தமிழ்ச் சங்கம் அப்போது நடத்திவந்த பண்டிதர் தேர்வுக்கும் படித்து 1935 இல் எழுதித் தேறினார்; 1936 இல் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராய் அமர்ந்து 1941 வரை தமிழாசிரியப் பணி புரிந்தார்; 1941இல் பச்சையப்பன் கல்லூரியில் பதவி கிடைக்கவே அங்கு விரிவுரையாளராய்ச் சேர்ந்து தமிழ்த் துணைப் பேராசிரியராய் உயர்ந்து 1961 இல் ஓய்வு பெற்றார். அரசாங்க ஓய்வுகால ஊதியமும் அவருக்குக் கிடைத்தது.

முதலில் நாயகர் சென்னைச் சாதுமகா சங்கத் தலைவரும் வேதாந்தப் பேரறிஞருமான வீர. சுப்பைய அடிகளாரிடமும், பின்பு வியாசர்பாடிக் கரபாத்திர அடிகளார் ஆசிரமத் தலைவரான முக்தானந்த அடிகளாரிடமும் வேதாந்தம் பயின்றார்; பின்னவரிடம் வடமொழியும் கற்றார். பிற்காலத்தில் சைவசித்தாந்த சாத்திரத்தில் பேரார்வம் கொண்டு தாமே அவற்றைப் படித்து அச்சாத்திரத்திலும் பயிற்சி மிக்கவராய் இருந்ததோடு, சைவ சித்தாந்தமே சிறந்தது என்றும் பேசிவந்தார். வைணவராயிருந்தும் நாயகர் சைவப் பற்று மிக்கவராகவே விளங்கினார். காசி இருடிகேசம் முதலிய வடநாட்டுத் திருப்பதிகளையும் தென் தமிழ்நாட்டுப் பாடல் பெற்ற கோயில்களையும் வணங்கியவர் இவர்.

தாம் படித்த இரவுப் பள்ளி செய்த நன்றியை மறவாது நாயகர் அப்பள்ளியில் 47 ஆண்டுகளாய்ப் பத்தாம் வகுப்பிற்கு வாரத்தில் ஒருநாள் தமிழ் கற்பித்து வந்தது குறிப்பிடத் தக்கது.

அவருக்கு மாதவன் என்னும் பெயருடைய ஒரே மகன் இருக்கிறார்.

*என்னரிய இனியநண்பர் இலக்கணத்தில் பெரும்புலவர்*
*பன்னரிய நற்கவிஞர் பரஞானப் பேரறிஞர்*
*இன்றுனையே நாடிவிட்டார் எம்நடேச நாயகரும்;*
*அன்னவரை இறைவா ! நீ ஆண்டருள வேண்டுவனே !*

## ‘வள்ளுவர் கண்ட அரசியல்’
## மதுரைப் பல்கலைக்கழகக் கருத்தரங்கு

மதுரைப் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆய்வகத்தின் சார்பில் ‘வள்ளுவர் கண்ட அரசியல்’ என்னும் பொருள் பற்றி திச. 31, சன. 1 ஆகிய இரு நாட்களிலும் கருத்தரங்கு நடைபெற்றது. இதனை மதுரை தல்லாகுளத்திலுள்ள பல்கலைக்கழகக் கட்டிடத்தில் மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் மு. வரதராசனார் தலைமை தாங்கி நடத்தினார்.

மதுரையிலும் சென்னையிலுமுள்ள பேரறிஞர்கள் டாக்டர்கள் எம். முத்துராமன், கே. வி. இராமன், நா. சுப்பிரமணியம், டி. முருகரத்தனம், இரா. சாரங்கபாணி, திருவாளர்கள் பு. ரா. பக்கிரிசங்கர், பி. சூரியநாராயணன், எஸ். சுப்பிரமணியம், ஜி. சுந்தரமூர்த்தி, அ. ச. ஞானசம்பந்தம், அ. மு. பரமசிவானந்தம் முதலியோர் இதில் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத் திருக்குறள் ஆய்வகம் கேட்டுக்கொண்ட தற்கிணங்க மதுரையிலுள்ள சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகக் கிளை ‘திருக்குறள் அரிய நூல் காட்சி’யைக் கருத்தரங்கினையொட்டி அமைந்திருந்தது. இதில் குறளின் பல்வேறு உரைகள், மூலங்கள், மொழிபெயர்ப்புக்கள், குறள் நூலாசிரியர்களின் படங்கள் முதலியவை இடம் பெற்றன. இவை அனைத்தும் சென்னை மறைமலையடிகள் நூல் நிலையத்திலுள்ள தொகுப்பாகும். இவ்வரிய நூல் காட்சியைக் கண்டு களித்த பேராசிரியப் பெருமக்களின் பாராட்டுரைகள் வருமாறு :

*வரலாற்று முறைமையில் வள்ளுவர் நூல் வெளியீடுகள், கையேடுகள் ஆகிய அனைத்தும் இக்காட்சியில் வைத்திருப்பதோடு, பிற மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள குறள் வெளியீட்டையும் பொதுமக்கள் பார்த்துத் தங்கள் பாரம்பர்யம் எத்தகையது என உணரச் செய்துள்ள சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினைப் பெரிதும் போற்றுகின்றேன். பாராட்டுகின்றேன்.*

**இராம. சண்முகம்,** *உதவிப் பேராசிரியர், திராவிட மொழிப் பிரிவு, மதுரைப் பல்கலைக்கழகம். 31—12—’72.*

திருக்குறள் நூற் காட்சியைக் கண்டு பயனெய்தினேன்.

அ. ச. ஞானசம்பந்தன், தமிழ்த்துறைத் தலைவர், மதுரைப் பல்கலைக்கழகம்.

திருக்குறள் பற்றிய பழஞ்சுவடிகளின் பயனுள்ள தொகுப்பு இது; 'கழகத்தார்' மட்டுமே இவ்வாறு செய்ய இயலும்! பாராட்டுக்கள்.

சு. குழந்தைநாதன், தமிழ்த்துறைத் தலைவர், தெலசால் கல்லூரி, மதுரை மாவட்டம்.

காண்டற்கரிய உரைகளும் அறிஞர்தம் எழுத்துக்களும் கொண்டுள்ள இத்திருக்குறள் நூல் காட்சி தமிழை வளர்க்கிறது.

தே. தியாகராசன், கீழ்த்திசை மொழித்துறைத் தலைவர், டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை.

திருக்குறள் கண்காட்சி அரிய முயற்சியின் சிறந்த விளைவாக அமைந்து பயன்தந்துள்ளது. பாராட்டுக்கள்.

சக்திப்பெருமாள், தமிழ்ப் பேராசிரியை, பாத்திமாக் கல்லூரி, மதுரை.

திருக்குறள் நூல் காட்சியினைக் கண்டேன். இத்தகைய ஒரு தொகுப்பினைச் சேகரித்துப் போற்றிப் பாதுகாப்பது மிக அரிது. இந்த அருமையான செயலை, பெருமைமிகு செயலைக் கழகத்தால் தான்—சைவ சித்தாந்தக் கழகத்தால்தான்—செய்ய முடியும். செயற்கரிய செயலினைச் செய்த தாமரைச் செல்வரை வாழ்த்துகிறேன்.

தி. அ. சொக்கலிங்கம், முதல்வர், யாதவர் கல்லூரி, மதுரை.

திருக்குறள் நூல்காட்சி கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து நல்குகிறது. அரிய நூல்கள் ஆய்விட்ட பதிப்புக்கள் மீண்டும் அச்சேறின் நலம். இங்ஙன் முயற்சியும் அத்திருவுடையாரும் வெல்க.

ம. சி. இராமர், தமிழ்த்துறைத் தலைவர், நா. ம. ச. ச. வெ. கல்லூரி, மதுரை.

மதுரைப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப் பெற்றிருந்த திருக்குறள் நூல் காட்சியை ஆர்வத்துடன் கண்டு களிப்புடன் அறிவும் பெற்றேன். இஃது ஒரு சிறந்த தமிழ்த் தொண்டு என்பதை எல்லோரும் ஏற்பர்.

மோசஸ். பொன்னையா, தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை-2.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் பல்லாண்டுகளாக அரிதின் முயன்று சேர்த்த நூற் செல்வத்தைக் கண்டு களித்தேன். வேறெங்கும் காணக்கிடைக்காத செல்வம் இது. கழகத்தின் ஆளுநர் பாராட்டத்தக்கவர். வாழ்க கழகம்.

சுப. அண்ணாமலை, தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

# செய்தித்தாள் காட்சியகம்

உலகத்தில் செய்தித்தாள்கட்கென்று அமைந்துள்ள ஒரே காட்சியகம் (Museum) மேற்கு செர்மனியில் உள்ளது. ஆலந்து – பெல்சியம் நாடுகளின் எல்லைக்கருகிலுள்ள ஆச்சென் மாநிலத்தில் சார்லெமாங்கே என்னும் நகரம் உள்ளது. அங்குதான் இந்தச் செய்தித்தாள் காட்சியகம் உள்ளது. உலகத்தின் மிகப் பெரிய செய்தித்தாள்—மிகச் சிறிய செய்தித் தாள்—மிகப் பழைய செய்தித்தாள் அண்மையில் பட்டிலேயே அச்சடிக்கப் பெற்று வெளிவந்துள்ள தாள் என்று இவ்வாறு பலவகையான செய்தித் தாள்கள் 1882 இல் தொடங்கப் பெற்ற இக்காட்சியகத்தில் உள்ளன. 30 பல்வேறு மொழிகளில் வெளியான 1,20,000 தாள்களை இக்காட்சியில் காணலாம். இங்கு எல்லாருடைய கவனத்தையும் ஈர்ப்பது முழுவதும் சிவப்பு மையால் அச்சிடப்பெற்ற 19 மே 1849 நாளுக்குரிய செய்தித்தாளாகும். அதன் முதல் பக்கத்தில் அத்தாளிகையின் ஆசிரியரான கார்ல் மார்க்ஸ் சுடப்பட்ட செய்தி வெளி வந்துள்ளது.

இந்த ஆச்சென் செய்தித்தாள் காட்சியகம் "ஆஸ்கர் வான் பார்க்கென்பெக்" (Oskar von Forckenbeck) என்ற தனி மனிதருடைய வாழ்க்கைக் கனவும் வாழ்வுப் பணியுமாகும். பொழுது போக்காக இப்பணியைத் தொடங்கிய அவர் இறுதியில் தம் உடைமை முழுவதையும் இக்காட்சியகத்துக்கே எழுதி வைத்தார். ஒரு தாளின் முதல் இதழ், இறுதியில் வெளியான இதழ், இடையிடை வெளிவந்த சிறப்பு இதழ்கள், ஆண்டு மலர்கள் ஆகியவற்றைத் தொகுப்பதே அவர் நோக்கம்.

இதற்காக அவர் 31 ஆண்டுகள் உலகத்தின் பல்வேறு பகுதிகளில் பயணஞ்செய்து செய்தித்தாள் வெளியீட்டாளர்களையும் ஆசிரியர்களையும் பார்த்து அவர்கள் கொடுத்த தாள்களையெல்லாம் சேர்த்தார். நியூசிலாந்திலும் கேப் டவுனிலும் பொழுதுபோக்காகத் தொகுத்து வைத்திருந்த செய்தித் தாள் தொகுப்புக்களை விலைக்கு வாங்கினார். 1895 இல் அவர் மறைவுக்கு முன் ஆச்சென் மாநில அரசிடம் இக் காட்சியகத்தை ஒப்படைத்தார். அந்நாளிலிருந்து அவ்வரசே இக்காட்சியகத்தைப் பொருட்செலவிட்டுப் பாதுகாத்து வருகிறது.

காட்சியகத்தில் ஒரு பகுதி நூலகம்; அதில் செய்தித் தாள்களின் வரலாறு பற்றிய 13,000 நூல்கள் உள்ளன. ஒரு பட்டியல் அறை, மூன்று காட்சி அறைகள் அப்பகுதியில் உள்ளன. அவ்வப்பொழுது அரிய செய்தித்தாள்களைக் காட்சியாக அக்காட்சியகத்தினர் அமைக்கின்றனர்.

பூனையைப் பற்றியே 1866 இல் மூனிச்சிலிருந்து வெளிவந்த 'மியாவ்' என்ற செய்தித்தாள்; "4 பெரிய உருளைக்கிழங்குகளும் 3 சிகரெட்டுகளுமே" விலையென்று குறிக்கப் பெற்ற 'தி டிரிஸ்டன் டைம்ஸ்'; கையெழுத்தில் வெளிவந்த 12 செய்தித்தாள்கள்: இவை போன்ற பல அரிய செய்தித்தாள்களை இங்குக் காணலாம். 50 எழுத்துக்களைக் கொண்ட செரூகி என்ற மொழியில் 1830இல் வெளிவந்த இரண்டு கலங்களையேயுடைய செய்தித்தாள் இங்கு உண்டு. பாட்டு வடிவிலேயே வந்தது 1777 இல் ஒரு செய்தித்தாள். 2·7 அங்குலத்திற்கு 4·3 அங். அளவுடைய ஒற்றைக் கலக்குட்டிச் செய்தித்தாள் போப்பாண்டவரின் ஒப்புதலோடு வெளியிடப் பெற்றது.

நூற்றாண்டுகட்கு ஒருமுறை வெளிவரும் மிகப் பெரிய அளவுள்ள 'தி கான்சலேசன்' என்ற செய்தித்தாள் 1859 இல் நியூயார்க்கிலிருந்து வந்தது. அதன் அளவு 51 × 35 அங். ஒரு பக்கத்திற்கு 13 கலங்கள். 40 துணையாட்களோடு எட்டு வாரங்கள் உழைத்து ஜியார்ஜ் ராபர்ட்ஸ் இதைக் கொணர்ந்தார். இதன் அடுத்த இதழ் 1959 இல் வெளிவந்திருக்க வேண்டும். இதழாசிரியரே அதற்குள் மறைந்திருப்பார். பின் எப்படி அடுத்த இதழ் வெளிவந்திருக்கும்? இவ்வாறு பல்வேறு சுவையான செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ள 1,20,000 செய்தித்தாள்களை இக் காட்சியகத்தில் காணலாம்.

நன்றி: நிரேோ லோ பெல்லோ
—சண்டே ஸ்டேண்டர்ட் நவ. *26-11-72.*

---

# செய்திகளும் குறிப்புகளும்

## படிக்கும் பழக்கம்

*பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களைத் தவிர அறிவு வளர்ச்சிக்கென நூலகங்களிலிருந்து வேறு பொது நூல்களையும் மாணவர்கள் எடுத்துப் படித்தல் வேண்டும். இத்தகைய படிக்கும் பழக்கம் இந்தியாவிலுள்ள பள்ளிமாணவர்களில் எத்துணைப் பேர்களிடம் காணப்படுகின்றது என்னும் புள்ளிவிவரத்தைக் கண்டறிய அண்மையில் அனைத்து நாட்டுப் புத்தக ஆண்டினையொட்டி இந்தியக் கல்வி அமைச்சகம் எடுத்துக் காட்டுக்காக 88 பள்ளிகளில் இதற்கான கணக்கெடுப்பினைச் செய்து பார்த்தது. அங்ஙனம் செய்ததில் சராசரியாக ஒரு மாணவன் 0·9 புத்தகமே படித்திருக்கிறான் என்ற உண்மை புலனாயிற்று. அதே நேரத்தில் முன்னேறியுள்ள பிற நாடுகளில் இதைப்போல் 5 மடங்கு ஒவ்வொரு மாணவனும் பொது நூல்களைப் படிக்கிறான் என்பதும் தெரியவந்தது.*

இதிலிருந்து தாய்மொழியிலுள்ள நூல்களைப் படித்துப் பயன் பெறும் பழக்கம் நம் பள்ளிச்சிறாரிடம் மிக மிக அருகிக் காணப்படுகிற தென்றும், இங்கிலையினை மாற்றிக் காலத்திற் கேற்ற புதிய நூல்களைப் பள்ளி நூலகங்களில் வாங்கிவைத்து அவற்றைப் படிக்கும் பழக்கத்தை மாணவரிடையே வளர்த்தல் வேண்டும் என்றும் கருதப்படுகிறது.

## புலியைக் காப்பாற்றுங்கள்!

புலியைக் காப்பாற்றுவதா! இஃதென்ன விந்தை என்று எண்ணுகிறீர்களா? ஆம்; கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்தியாவின் தேசிய காட்டுவிலங்கு சிங்கம் என்று அரசினர் கடைப்பிடித்து வந்த கொள்கை மாற்றப்பட்டு, இனிப் புலிதான் தேசிய விலங்கு என்று முடிவு செய்யப் பட்டுள்ளது. இதற்குக் காரணம், சிங்கம் குஜராத்தில் மட்டும் காணப் படுகிறதேயன்றிப் பிற மாநிலங்களில் அதிகமாகக் காணப்படுவதில்லை. மேலும் சிங்கங்களின் தொகை அருகியும் புலிகளின் தொகை பெருகியும் வருகிறது. எனவே, புலிகளின் தொகை குறையாமல் பார்த்துக்கொள்ள 'புலிகளைக் காப்பாற்றுங்கள்' என்கிறார் நடுவண் அரசின் அமைச்சர் கரண்சிங்.

---

# மதிப்புரை

## தமிழம் (தனித்தமிழ்த் திங்களிதழ்)

[ஆசிரியர்: உலக முதல்வி, 17, நாகப்ப முதலி தெரு, சென்னை-12 விலை: 50 காசு]

மொழி ஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் அவர்களின் படத்தை முகப்பில் கொண்டு முதல் இதழாக வெளிவந்திருக்கும் இத்திங்களிதழ் அதன் பெயருக்கேற்பத் தனித்தமிழ் மணமும் தமிழ் இனப்பற்றும் தமிழகப்பற்றும் ஒருங்கு திரண்டு நல்லதோர் இலக்கிய அரசியல் குமுகாய மலராக மலர்ந்துள்ளது எனலாம். தமிழக அறிஞர்கள் பலரின் நல்வாழ்த்துக்களுடன் வெளிவந்திருக்கும் இவ்விதழ் இன்றைய தமிழகத்தின் உள்ளக் கிளர்ச்சியின் எதிர் ஒலியும் ஒளியுமாகும். தேவநேயப் பாவாணர், பெருஞ்சித்திரனார், மகிழரசன், அப்பாத்துரையார், டாக்டர் சஞ்சீவி, புலவர் அறிவுஒளி, திருமலை முத்துசுவாமி, பெரும்புலவர் மே. வீ. வேணுகோபாலனார், அ. கி. பரந்தாமனார், கீ. இராமலிங்கனார், செம்பியன் மற்றும் பல புலவர் பெருமக்களின் கட்டுரைகளும் கவிதைகளும் இவ்விதழைச் சிறப்பிக்கின்றன. பயனுள்ள ஏடு. படித்துப் பாருங்கள்.

## ஆராய்ச்சி

பாளையங்கோட்டையிலிருந்து தமிழறிஞர் திரு. என். டி. வானமாமலை, பி. ஏ. எல். டி. அவர்களை ஆசிரியராகக்கொண்டு இது காலாண்டு இதழாக வெளிவருகின்றது. தமிழ்மொழி, இலக்கியம், இனம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் மட்டுமே இவ்விதழில் வெளி வருகின்றன. அவ்வப்பொழுது ஆங்கிலக் கட்டுரைகளும், இலக்கியத் திறனாய்வாளர்கள், இக்காலப் புதினம், சிறுகதை, கவிதைகள் பற்றிய

ஆராய்ச்சிக் கட்டுரைகளும் இதில் காணலாம். இப்பொழுது இதன் மூன்றாந் தொகுதி முடிவடையும் நிலையிலுள்ளது ஆராய்ச்சி செய்வோர்க்குப் பெரிதும் பயன்படக்கூடிய இதழ். அளவு 25 × 16 செ.மீ.: இதன் ஆண்டுக் கட்டணம் ரூ. 10-00.

## Saiva Siddhanta

சைவசித்தாந்தத்தின் தத்துவத்தை விளக்கும் ஓர் அரிய ஆங்கிலக் காலாண்டிதழ். சைவ சித்தாந்தமகாசமாசத்தினரால் வெளியிடப் பெறுவது. இதன் ஆசிரியர் டாக்டர் வ ஆ. தேவசேனாபதி, எம்.ஏ. பி.எச்டி. இதில் பல மேனாட்டறிஞர்களும் கிறித்தவப்பாதிரிமார்களும் தமிழறிஞர்களும் தொடர்ந்து சைவசித்தாந்தத்தின் உட்கருத்துக்களைப் பற்றியும் சித்தாந்த நூல்களைப்பற்றியும் ஆராய்ச்சி செய்து கட்டுரைகளை எழுதிவருகின்றனர். அளவு டெம்மி (21 × 14 செ. மீ.) (ஆண்டுக்கு 240 பக்.) இதன் ஆண்டுக் கட்டணம் ரூ. 5-00

## Journal of Indian History

இவ்விதழ் கேரளப் பல்கலைக் கழகத்தினரால் நடத்தப் பெறுவது. ஆண்டுக்கு மூன்று இதழ்கள். இப்பொழுது இதன் 50வது ஆண்டு நடைபெறுகின்றது. கேரளப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் டாக்டர் டி. கே ரவீந்திரன் இதன் ஆசிரியர். துணை ஆசிரியர்கள் மூவர் : திரு கே. பி. பிள்ளை, திரு பி. சி. சோசப், டாக்டர் கே. கே. பிள்ளை.

இந்திய வரலாற்றைப் பற்றியும் குறிப்பாகத் தென்னிந்தியாவைப் பற்றியும் விரிவான ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆங்கிலத்தில் வெளிவருகின்றன. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலுள்ள வரலாற்றுத்துறை அறிஞர்கள் இக்கட்டுரைகளை எழுதுகின்றனர். 1971 இதழில் தமிழகம் தொடர்பாக மூன்று கட்டுரைகள் டாக்டர் கே ராஜய்யன், டாக்டர் மாயா குப்தா, டாக்டர் கே. வி. ராமன் ஆகியோரால் எழுதப்பெற்றுள்ளன. இதன் ஆண்டுக் கட்டணம் ரூ. 25-00 இதன் அளவு ராயல் (25 × 16 செ. மீ.)

## உலக இதய ஒலி

திரு டி. டி. திருமலை என்பாரை ஆசிரியராகக் கொண்டு மதுரையிலிருந்து வெளிவரும் காலாண்டு இதழ் இது. அண்மையில் இதன் 6ஆம் எண் வந்துள்ளது. இலக்கிய, மொழி ஆராய்ச்சி, வரலாற்று ஆராய்ச்சிக் கட்டுரைகள் இதில் இடம் பெறுகின்றன. பேரா அ. சீனிவாசராகவன், நீதிபதி மகராசன், வித்துவான் ல. சண்முகசுந்தரன் போன்ற அறிஞர்களின் கட்டுரைகள் தொடர்ந்து இவ்விதழ்களில் வெளிவருகின்றன. அளவு ராயல் (25 × 16 செ. மீ.) (50 பக்.) இதன் ஆண்டுக் கட்டணம் ரூ. 5-00

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : வ. சுப்பையா.

# திருவாசகமணி அவர்கட்குப்
# பாராட்டு விழா



திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் 65-வது பிறந்தநாள்
விழாவும், அவரது சிவத்தொண்டின் பாராட்டு விழாவும்
மயிலைக் கபாலீசுரர் கோயிலில் நடைபெற்றபோது
உயர்நீதிமன்ற நடுவர் திரு. என். கிருட்டிணசாமி ரெட்டியார்
திருவாசகமணிக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தல்.